# ’மூலதிராவிடம்’ என்பது முறையற்ற ஏய்ப்பு !

அண்மையில் ஒரு திரைப்பட நடிகர், திரைப்படம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போது, அவருடைய கன்னட நண்பருடன் அவருக்குள்ள நெருக்கத்தைக் குறிக்கும் வகையில், தமிழில் இருந்து கன்னடம் பிறந்தது (தாய் மகள் உறவு) என்ற பொருள்படும்படி பேசிவிட்டாராம். அதனைத் தொடர்ந்து கருநாடகத்தில் எதிர்ப்பு உண்டாகி, அந்த நடிகரின் படத்தைக் கருநாடகத்தில் வெளியிட தடையேற்பட்டது. இதன் தொடர்பாகப் பலரும் பல கருத்துகளைக் கூறினார்கள்.

முத்துமணி என்பவர் தினமணி நாளிதழில் ஒரு கட்டுரை எழுதினார். அதில், ‘நாகாக்க... காவாக்கால்’ என்று அந்த நடிகரை எச்சரித்திருந்தார். அக் கட்டுரையில் பெட்டிச்செய்தியாகத், ‘தாய்மொழி அல்ல ஒரு தாய் மக்கள்’ என்ற தலைப்பிட்டும் எழுதியிருந்தார். அதில், ‘தமிழும், கன்னடமும் ‘சகோதர’ மொழிகளே அன்றிக், கன்னடத்துக்குத் தமிழ் தாய்மொழி அல்ல’ என்று எழுதியதோடு ‘முதனிலைத் திராவிடமொழியை மொழியியல் அறிஞர்கள் தற்போது மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார்கள்’ என்றும் எழுதியிருந்தார். இதிலே, ‘முதனிலைத் திராவிட மொழி’ (proto-Dravidian language) என்பதும், ‘மீட்டுருவாக்கம்’ (Reconstruction) என்பதும் என்ன என்று கொஞ்சம் பார்ப்போம்.

முதனிலை மொழி (Proto-language) அல்லது மூலமொழி அல்லது முந்துமொழி என்பது கற்பனையாக – ஊகமாகக் - கொள்ளப்படும் ஒரு மொழியாகும். மூலமொழி என்பது துல்லியமான வரலாற்றுப் பதிவுகள் இல்லாத நேரத்தில், அறிவியலால் கணிக்கப்படும் ஒரு புனைவு (hypothetical construct) தான். அது உண்மையில் இருந்ததா என்பதை 100% மெய்ப்பிக்க முடியாது. இது ஒரு அறிவியல் புனைப்பு (scientific hypothesis) என்று கூறுகிறார்கள்.

மூலமொழி என்பது உண்மையில் இருந்திராத, ஆய்வுக்காக மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட (Hypothetical reconstructed language) ஒன்றே என்றும் கூறியுள்ளார்கள். மேலும், ''மூலமொழிக் கொள்கை'' என்பது மொழிஆய்வில் அனைவரும் ஏற்றுக்கொண்ட கொள்கை என்று கொள்ளமுடியாது. இதற்குப் பின்னால் வகுப்பு (வர்க்க) அரசியல் இருக்கிறது என்கிற கருத்தும் உண்டு.

மாருக்சியர் இசுதாலின், “மொழிக்குடும்பம், பொதுவான, பழைமை யான மூலமொழியில் இருந்து பிரிந்து உருவான கிளைமொழி களை உள்ளடக்கியது எனும் இந்தோ ஐரோப்பியச் சிந்தனைக் கொள்கையைக் குறிக்கும்” எனக் கூறியுள்ளதாக அறிகிறோம்.

முன்னதாக இருந்த ஒரு மொழியிலிருந்தே (உண்மையில் அப்படி ஒரு மொழி இல்லாமலும் இருக்கும்) குடும்ப மொழிகள் உருவாயின என்ற முன்முடிவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுமுறையே மூலமொழி ஆய்வாகும்.

மூலமொழி என்பது சில தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருதுகோள் (hypothesis) மட்டுமே, அது ஒரு நேரடியான உண்மை அல்லது நேரடியாக மெய்ப்பிக்கப்பட்ட ஒன்று அன்று என்ற கருத்தும் உண்டு. எனவே, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் மூலத் திராவிடமொழி ஒன்றிலிருந்து உருவாயின என்பது மொழிநூலாரின் ஊகமே தவிர முடிந்த முடிவு அன்று.

இனி, ‘மீட்டுருவாக்கம்’ என்றால் என்ன என்று பார்ப்போம்:

மொழியியல் மீட்டுருவாக்கம் (Linguistic Reconstruction) என்பது, ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த பல மொழிகளை ஒப்பீடு செய்து, அக் குடும்ப மொழிகள் வந்திருக்கக் கூடிய பண்டைய "மூலமொழி" (Proto-language) (அப்படி ஒன்று இருந்தால்) எப்படி இருந்திருக்கும் என்று கணிப்பதற்கான அறிவியல் செயல்முறை என்ற விளக்கம் தருகின்றனர்.

மொழியியல் மீட்டுருவாக்கம் என்பது, இப்போது இல்லாத – இறந்துபோன - அல்லது நேரடியாகக் கிடைக்கப்பெறாத ஒரு மொழியின் (மூலமொழி - Proto-language - என்று கூறப்படுவதின்) கூறுகளை, அதிலிருந்து உருவான அந்தக் குடும்ப மொழிகளின் - ஒப்பீட்டு ஆய்வு மூலம் மீண்டும் உருவாக்குவதாகும் என்றவாறும் விளக்கம் தருகின்றனர்.

இது, உயிரோடில்லாத, நேரடிப் பதிவுகள் இல்லாத ஒரு மொழியை, நம்மிடம் உள்ள பிற மொழிகளின் வழியாகப் புனைந்து உருவாக்கும் செயல். இது ஒரு புனைவு (hypothesis) — உறுதியான பதிவு கிடையாது. ஆனால், இது ஒப்பீட்டு முறையில் தரவுகள்,

ஒலிவினை நெறிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றும் விளக்கப்படுகிறது.

சரி, எல்லா மொழிக்குடும்பங்களுக்கும் "மூலமொழி" மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறதா? என்றால், ‘இல்லை’ என்பதே விடையாகும்.

இலத்தீனிலிருந்து உரோமன் குடும்பமொழிகள் (பிரெஞ்சு, இசுப்பானிசு, போர்த்துகீசியம், இத்தாலியன், உருமேனியன் போன்றவை) உருவாயின என்று கூறுகிறார்கள். இலத்தீன், பிரெஞ்சு, இசுப்பானிசு, போர்த்துகீசியம், இத்தாலியன், உருமேனியன் போன்றவை கிளைமொழிகள் என்றோ, அக்காதங்கை மொழிகள் (Sister languages) என்றோ கூறுவதில்லை.

சமற்கிருதத்திலிருந்து வட இந்திய மொழிகள் (இந்தி, பெங்காலி, மராத்தி, குசராத்தி போன்றவை) உருவாயின என்று பொதுவாகக் கூறப்படுகிறது. சமற்கிருதம், இந்தி, பெங்காலி, மராத்தி, குசராத்தி போன்றவை கிளைமொழிகள் என்றோ, அக்கா தங்கை மொழிகள் (Sister languages) என்றோ கூறுவதில்லை. இவை எடுத்துக்காட்டுகள் மட்டுமே. பெரும்பாலும் இப்படித்தான் உலகில் பல்வேறு மொழிகள் பற்றிய ஆய்வு நடக்கிறது.

தமிழ் இயற்கையான மொழி என்பதால், அது மூலமொழி ஆகாது என்றும், ஆனால், இலத்தீன், சமற்கிருதம் பேசப்படாத மரபு மொழிகள் (இறந்துபட்ட மொழிகள்) என்பதால் அவற்றை மூலமொழியாகப் பார்த்து விடுகிறார்கள் என்றும் கருத்து கூறப்படுகிறது

தமிழர்களிடம் ஓர் அமைதிக்காகப், ‘பிற திராவிட மொழிகளைக் காட்டிலும், மூலத் திராவிட மொழியோடு மிக நெருக்கமாக இருப்பது தமிழ்தான்’ என்று கூறிவிடுவார்கள்.

இனி, இலத்தீனுக்கும், சமற்கிருதத்திற்கும் பல்வேறு கூறுகளில் உள்ள தகுதிகளைவிடத் தமிழின் தகுதிகள் குறைவானவையா? ‘இல்லை’ என்று ஒப்புகிறார்கள். உண்மையில், அந்த இரண்டு மொழிகளின் தகுதி நிலைகளுக்கும் மேலான தகுதிநிலை உடையது தமிழ். அதை யாரும் மறுக்க இயலாது.

இப்படிப்பட்ட நிலைகளில், மொழியியல் மீட்டுருவாக்கம் என்னும் பொதுக்கொள்கை முரணாக இருப்பது தெளிவு. தமிழை

மட்டும் கிளைமொழிகளுள் ஒன்று என்று கூறுவதும், அதைவைத்து மீட்டுருவாக்கம் என்று கூறி வலியுறுத்துவதும் ஏன்?

மேலையரை (மேற்கு நாட்டினரை)ப் பொறுத்தவரை, இலத்தீன் உரோமானியப் பேரரசின் அதிகார அடிப்படை மொழியாக இருந்ததால், அதன் வழித்தோன்றல் மொழிகளுக்கு - உரோமான் குடும்ப மொழிகளுக்கு - இலத்தீன் தாய்மொழி என்பது எளிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், தமிழ்மொழிக்கு அப்படியொரு அரசியல் நடுவம் – அதிகாரநிலை இல்லை - என்ற உண்மை எண்ணிப் பார்க்கத் தக்கது.

பல சமையங்களில், மேலை நாட்டு மொழியியல் ஆய்வுகளில் ஒரு குறிப்பிட்ட வல்லாண்மைப் (மேலாதிக்கப்) பார்வை இருப்பதால், இந்திய மொழிகளின் ஆய்வு முறையில் குறிப்பாக திரவிட மொழிகளின் ஆய்வுமுறையில் வேறுபாடுகள் இருக்கின்றன எனவும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது..

உலகமொழியறிஞர்கள் தொல்காப்பியம், கழக இலக்கியங்களில் போதிய பயிற்சிபெறா நிலை (Lack of Proficiency and Awareness of Tolkappiyam and Sangam Literature among World Linguists) அவர்களுக்கு முறையாக அறிமுகப்படுத்தாத நிலையும்கூட காரணமாக உள்ளது.

மேற்குலக மொழியியல் ஆய்வுகள் பெரும்பாலும் இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சுற்றியே வளர்ந்தன. இதனால், கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் போன்ற மொழிகளில் அவர்களுக்கு ஆழ்ந்த புலமை உண்டு.

அவர்களுக்குத் தொல்காப்பியம், கழக இலக்கியம் போன்ற நூல்கள் மொழியியல், இலக்கியம், பண்பாடு, குமுகவியல் எனப் பல்துறை சார்ந்த மிக உயர்ந்த கருவூலங்கள் என்பதையும், தமிழ் உலகின் தொன்மையான மொழி என்பதையும் முறையாக அறிமுகப்படுத்தாததும், அரிய தமிழ் இலக்கியங்கள் முழுமையாக ஆங்கிலத்திலும் பிற முகன்மை மொழிகளிலும் கிடைக்காததும் பெரும் குறைபாடாகவும் காரணமாகவும் இருக்கிறது..

மொழியறிஞர்களில், கழகஇலக்கியம், தொல்காப்பியம் போன்றவற்றில் போதிய பயிற்சியும் தோய்வும் உடையவர்கள் உலக அளவில் மிகக் குறைவு. இதனால், தமிழின் தனிச்சிறப்பான மொழியியல் கூறுகள், அதன் வரலாற்றுப் போக்குகள், பிற

மொழிகளுடனான அதன் தொடர்புகள் போன்றவை முழுமையாக ஆராயப்படாமல் இருக்கின்றன என்பது உண்மையாகும்.

இனி, இந்திய ஒன்றியத்தில் தமிழின் நிலையைப் பார்ப்போம்:

இலத்தீன், உரோமானியப் பேரரசின் ஆட்சிமொழியாக அதிகார நிலையில் இருந்தது. சமற்கிருதம் இந்திய ஒன்றியத்தில் ஆட்சிமொழியினும் மேலான அதிகார நிலையில் இருந்துவருகிறது. பிறமொழிகள் பட்டினியால் வாடுகையில், பலகோடிக்கணக்கான உருவாக்களை வீணில் விழுங்கிக் கொண்டு இருக்கிறது.

இந்திய ஒன்றியத்திலோ உலகில் வேறு எங்குமோ தமிழ் ஆட்சிமொழியாக இல்லை. எனவே தமிழ், அரசின் அதிகார அடிப்படை மொழி என்ற வாய்ப்பைப் பெறவில்லை.

இந்திய ஒன்றியத்தில் இந்தி பேசும் மக்கள் ஒப்பீட்டில் மிகுதியாக இருப்பதும், இந்தி மொழியை தேசிய மொழியாக்கும் முயற்சிகளும், இந்தி அல்லாத மொழிகளை, குறிப்பாகத் தமிழை, ஒருவகைச் சிறுபான்மைநிலைக்குத் தள்ளியுள்ளன. இது தமிழின் தொன்மையையும், தனித்தன்மை வாய்ந்த பிற சிறப்புகளையும் உலகஅளவில் எடுத்துச் செல்வதில் முன்னேறா நிலைக்குக் காரணமாக இருப்பதை மறுக்கஇயலாது.

மொழியியல் என்பது ஒரு அறிவியல் பிரிவு என்றாலும் மொழி, வரலாறு தொடர்பான நிலைகளில் சில சமையங்களில் அரசியல், குமுக, பண்பாட்டு இடையீடுகள் இருப்பதுண்டு என்றே கூறுகிறார்கள். திராவிட மொழிகளின் தோற்றம், 'மூல திராவிட' கருத்து முதலியவை பற்றிய தருக்கங்கள், சில சமையங்களில், பண்பாட்டு அடையாளம், அரசியல் அதிகாரம் போன்றவற்றுடன் இணைந்துவிடுகின்றன என்ற கருத்து உண்டு.

மொழியியல் அடிப்படையில் தமிழ் தகுதியைப் பெற்றிருந்தாலும், தமிழின் தனித்தன்மையை, தனித்தகுதியைக் குறைப்பதற்கான சில அரசியல் ஆற்றல்களின் முயற்சி இருப்பதை மறுப்பதற்கில்லை என்று கூறுகின்றார்கள்.

மொழிக்குடும்பத்தில் தமிழ் ஒரு பொதுவான தாய்மொழி என்பதை ஏற்றுக்கொள்வது, தங்கள் மொழியின் தனித்தன்மையைக் குறைப்பதாக மொழிக்குடும்பத்தில் உள்ள பிறமொழியினர்

உணர்வதால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என்று ஆட்சியாளர்கள் எண்ணக்கூடும் என்ற நொண்டிக் காரணமும் கூறப்படுகின்றது.

தமிழ் முதல் தாய்மொழி அல்லது திராவிட மொழிகளுக்குத் தாய் என்ற கூற்று ஏற்கப்பட்டால், தமிழ்த்தேசிய உணர்வுகளுக்கும், திராவிட இயக்க அரசியலுக்கும் வலுவேற்பட்டுவிடும் என்ற வலுவற்ற கருத்தும் இருப்பதை மறுப்பதற்கில்லை என்கிறார்கள்.

இவற்றை யெல்லாம் கருதாத இக்காலத் ‘தினமணி’, மொழிப்புலன், ஆய்வுத்தகைமையற்ற தக்கையராகிய சில ‘சொத்தைப்பணி’ எழுத்தரின் கூற்றுகளை கட்டங்கட்டிப் பெட்டிச்செய்தியாக வெளியிட்டு வருகிறது என்பதே அவலமாகும்.

# அகத்தியர் புரட்டு: தமிழ் தமிழர்க்கு எதிரான சூழ்ச்சி- 4

**- தமிழநம்பி**

முனைவர் **ப.தங்கராசு** அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேடு 'தமிழ் இலக்கியங்களில் அகத்தியர் - ஓர் ஆய்வு' என்னும் நூலாகும். இந்த ஆய்வு, தமிழ்மொழித் தொடர்பான அகத்தியரை மையமாகக் கொண்டு அமைந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அகத்தியன் என்னும் சொல் தமிழ்ச்சொல் எனக் கருதலாம் என்கிறார்.

'பொதியில் முனிவன்' என ஒரு விண்மீனுக்குப் பெயர் வழங்கப் பெற்றிருப்பதால் அப்பெயரை உடையவர் மிகப் பழங்காலத்தில் தமிழ்நாட்டில் பெரும்புகழுடன் விளங்கியிருத்தல் வேண்டும் என்றும், பொதியமலையில் வாழ்ந்ததாகக் கருதப்படும் அகத்தியரைத் தமிழர் எனக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார். "தமிழ் நூல்கள் குறிப்பிடுகிற அகத்தியர் தமிழ் அகத்தியர்" என்றும் வான்மீகியும் இவரைக் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறுகிறார். வடநாட்டு வேதகால அகத்தியர், பாரதகால அகத்தியர், இராமாயணகால அகத்தியர் ஆகியோர் ஆரிய அகத்தியர்கள் என்கிறார்.

அகத்தியர் என்னும் பெயருடையோர் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பலர் வாழ்ந்துள்ளனர்; ஆரிய அகத்தியர்கள் தவிர, தமிழகத்தில் அகத்தியர் என்னும் பெயரில் எழுவர் வாழ்ந்துள்ளனர்; அகத்தியர்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவினும் அவர்கள் வாழ்ந்த காலம் பற்றி எவரும் உறுதிப்பட நிறுவவில்லை என்று கூறுகிறார்.

அகத்தியர் என்னும் பெயர் உடையோர் தென்னிந்தியாவி னின்று கீழைநாடுகளுக்குச் சென்று இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பரப்பியதோடு அரசமரபையும் தோற்றுவித்துள்ளனர் என்று குறிப்பிடுகிறார்.

இறையனாரகப் பொருளுரையால் அறியப்பெறும் அகத்தியத்தைத் தொன்மையான இலக்கண நூலாகக் கொள்ளலாம் என்றும் 'பேரகத்தியத் திரட்டு' என்னும் பெயரால் காணப்படும் நூலில் இடம் பெற்றுள்ள அகத்திய நூற்பாக்கள் பிற்காலத்தவர்களால் எழுதப்பெற்றவை என்றும் கூறுகிறார். கம்பர் தம்காலத்தும்,

தமக்கு முற்பட்ட காலத்தும் தமிழ்நாட்டில் வழங்கிய அகத்தியர் பற்றிய கதைகளையும், வான்மீகத்தில் கூறப்பெற்ற அகத்தியர் பற்றிய கதைகளையும், ஒரே அகத்தியர் பற்றியனவாகவே சொல்லியமை, அகத்தியர் பற்றிய தெளிவான கருத்துக்குத் தடையாக உள்ளது என்று எழுதுகிறார்.

ஆய்வாளர் திருமந்திரமணி. துடிசைகிழார் **அ.சிதம்பரனார்** 'அகத்தியர் வரலாறு' என்னும் தம் நூலில், அகத்தியர் என்ற பெயர் கொண்டோர் பலராவர் என்றும் அவர்கள் வெவ்வேறு ஊரர்; வெவ்வேறு குலத்தர்; வெவ்வேறு காலத்தர்; வெவ்வேறு தொழிலர் என்றும் கூறுகின்றார்.

அகத்தியர் என்னும் பெயர் முதன்முதல் தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வந்த ஒருசிறந்த தமிழ்ப்பெயர். அதனால் அப்பெயரை எல்லோரும் தத்தம் குழந்தைகளுக்கு இட்டு வழங்கிவந்தார்கள். அகத்தியர் என்னும் பெயரை உடைய பெரியார்கள் பலர் தமிழ் நாட்டில் பல இடங்களில் பல காலங்களில் வாழ்ந்து வந்து உள்ளனர் என்று கொண்டு அவர்களுடைய வரலாற்றில் உண்மை காண முயல்வதே அறிஞர் கடன் என்கின்றார்.

அகத்தியர் என்ற பெயரைத் தமிழ்நாட்டில் வான்மீனுக்கு இட்டு வழங்க வேண்டுமானால் அப்பெயர் தமிழ்நாட்டில் பேரும் புகழும் பெற்றவருடையதாய் இருக்கவேண்டும் என்கின்றார்.

எழுமீன்(Great Bear – 'சப்தரிசி')மண்டலத்திலுள்ள அகத்தியன் என்னும் விண்மீன் மிதுனராசியில் தோன்றுங் காலத்தில் கடல்நீர் ஆவியாக மாறுவதனால் கடல் வற்றுகிறதென்றும், அது மறையுங் காலத்தில் மழை பெய்வதால் கடலில் நீர் நிறைகிறதென்றும் பரிபாடல் பாடல் கூறுகின்றது. இதனைத்தான் உருவகமாக (in metaphorical language) அகத்தியர் கடலைக் குடித்தார் என்றும், மறுபடியும் கடல்நீரை அவர் உமிழ்ந்து விட்டார் என்றும் பழங்கதைகள் (புராணங்கள்) கூறும் என்று பேராசிரியர் ஒ.சி.கங்குலி (O.C.Ganguly) கருதுகிறார் என்றும் எடுத்துக்காட்டுகிறார்.

ஆரியஅகத்தியர்கள், தமிழ்அகத்தியர்கள் உள்பட முப்பத்தேழு அகத்தியர்கள் இருந்ததாகக் காலக்கணிப்புடன் எழுதியுள்ளார் என்பதை முன்பே எடுத்துக்காட்டினோம். ஒரே நாட்டில் பல காலங்களில் இருந்த அகத்தியர்களின் வரலாறுகள் அனைத்தையும் ஒன்றுபடுத்துவது தவறு என்றும், தனித்தனி ஒவ்வோர் அகத்தியருடைய வரலாற்றைப் பிரித்துப் படித்தால்

முரண்பாடுகள் ஏற்படாது என்றும் தெளிவாகக் கூறுகிறார்.

இனி, அறிஞர் பலர் தம் எழுத்துகளில் அகத்தியர் தொடர்பாகத் தெரிவித்துள்ள கருத்துகளைக் காண்போம்:

**அ.மு பரமசிவானந்தம்:** 'வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்' என்னும் அவருடைய நூலில் கூறியுள்ளவை: கந்தபுராண வரலாற்றின்படி அகத்தியர் இமயத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவர் என்பர். வடமொழியில் உள்ள 'கந்த புராண'த்தில் அகத்தியர் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. அவரைத் தமிழ் அறிந்த முனிவராக அந்நூலில் எங்கும் குறிக்கவில்லை. அந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்த கச்சியப்பர் அவரைத் தமிழ்அகத்தியர் என்றே குறிக்கின்றார். 'மலயத்து வள்ளல்' என்றும், 'தமிழ்மாமுனி' என்றும் தமிழ் கந்தபுராணம் காட்டுகிறது. அகத்தியர் சிவபெருமான் திருமணம் காணச்சென்றிருந்தாலும், அவர் தமிழ்நாட்டிலிருந்து சென்றார் எனக் கொள்ளல் வேண்டும்.

சில புராண வரலாறுகள் வடமொழி, தமிழ் இரண்டையும் சிவபெருமான் உலகுக்கு அருளினார் என்றும் வடமொழியைப் பாணினிக்கும், தமிழை அகத்தியருக்கும் அறிவுறுத்தினார் என்றும் காட்டுகின்றன. மொழியியல்பு அறிந்தாருக்கும், வரலாற் றறிஞர்களுக்கும் இக்கருத்து முழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அன்று என்பது நன்கு விளங்கும்..

புராணங்கள் பிந்திய காலத்தில் சமயமும் பற்றும் பின்னிப் பிணைந்த காலத்துப் புலவன் உள்ளத்தில் உதித்த கற்பனைகளே என்பதை இன்று சமயநெறி உணர்ந்த தக்கவர்களே ஏற்றுக்கொள்கின்றார்கள்.

சிவபெருமான் திருமணத்துக்கு எத்தனையோ கடவுளரும் முனிவரும் வந்தனர் எனக் காட்டும் ஆரியர், அகத்தியர் வந்ததாகக் குறிக்கவில்லை என்பதை வடமொழி வாயிலாகக் கற்ற அறிஞர்கள் நன்கு விளக்கிக் காட்டுகின்றார்கள்.

அகத்தியருக்கு விந்தியமலை வழிவிடவில்லை என்று புராணக்காரர் கூறிய கதையால் அவரைத் தென்னாட்டு ஒழுக்கமும் பண்பாடும் விந்திய எல்லையிலேயே தடுத்து நிறுத்தின என்று கொள்வது பொருந்தும்.

வடநாட்டு அகத்தியரின் வேறாகத் தமிழ்நாட்டின் பொதிய மலையில் வேறு ஒர் அகத்தியர் இருந்தார் எனவும், அவருக்கும் வடமொழிக்கும் தொடர்பு ஒன்றும் இருந்ததில்லை எனவும், பெயர்

ஒற்றுமையால் இடைக்காலத்தில் இருவரையும் ஒருவரெனக் கருதியமையே இத்தகைய கற்பனைக் கதைகளுக்கும் பிறவற்றிற்கும் இடம்கொடுத்ததெனவும், உண்மையை எண்ணின், இருவேறு பகுதிகளில் – வடக்கிலும் தெற்கிலும் – இருவேறு அகத்தியர் வாழ்ந்தனர் எனக் கொள்ளலாம் எனவும், அவர்தம் பெயர் ஒற்றுமையைத் தவிர வேறு எதிலும் அவர்க்குள் தொடர்போ வேறு ஒற்றுமையோ இருந்ததில்லை எனவும் கொள்ளுதல் பொருத்தமாகும் என எண்ணுகிறேன்.

அகத்தியச் சூத்திரம் எனக் குறிக்கும் இரண்டொரு சூத்திரங்களும் சிறந்தவை எனக் கொள்ளக்கூடியன அல்ல. எனவே, இருக்கும் ஏதோ இரண்டொன்றைக் கண்டு அவற்றின்வழி அகத்தியர் பெருநூல் செய்தார் எனவும் அது மறைந்தது எனவும் கொள்ளுவதினும் அந்நூல் எழவில்லை என்றே கொள்ளல் பொருத்தமானதாகும்.

அகத்தியருக்கும் தொல்காப்பியருக்கும் எவ்வாறு தொடர்பு கற்பித்தார்கள் என்பது விளங்காத புதிராய் உள்ளது.

பொதியமலையில் தமிழ் அறிந்த நல்ல பண்பாடுடைய ஒரு புலவர் வாழ, அதே பெயரோடு வடக்கே இமயத்திலிருந்து வந்து விந்தியமலையில் மற்றொரு புலவர் வாழ்ந்தார் என்று கொள்ளுவதே அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவதாகும்.

**சோமசுந்தரபாரதியார்:** எந்த ஆதரவு வைத்துக் கொண்டு அகத்தியர் தமிழை உண்டாக்கினார், வளர்த்தார் என்று சொல்லுகிறீர்கள்? அவ்வாறு கூறுவது முழுப்பொய். தமிழைப் படித்ததால் அகத்தியன் பெருமை பெற்றான். அகத்தியன் கடவுள் அல்லன். அகத்தியன் ஒரு மனிதன். அகத்தியனைப் பற்றிப் புராணங்கள் கட்டுக்கதைகளைக் கிளப்பின - என்கின்றார்.

இவர் ஆங்கிலத்தில் எழுதிய அகத்தியர் பற்றிய கட்டுரையில், அகத்தியர் பலரே என்னும் கருத்தைக் கூறுகிறார்.

**மறைமலையடிகள்:** இவர் தமது, ‘மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில் குறிப்பிடுஞ் செய்திகள்: மணிமேகலையில் அகத்தியனாரைப் பற்றிய குறிப்புக் காணப்படினும் அவர் தமிழுக்கு இலக்கணம் செய்தார் என்றாவது, அவர் மாணாக்கர் தொல்காப்பியர் என்றாவது அதன்கண் ஏதுஞ் சொல்லப்பட்டிலது.

இறையனார் அகப்பொருளுரைப் பாயிரத்தில், அகத்தியனாரால் செய்யப்பட்டது அகத்தியம், அவர் இருந்தது தலைச்சங்கம் என்பது கூறப்பட்டதாலோவெனின்; அவ்வுரைப் பாயிரத்திலுள்ள இன்னோரன்ன வெல்லாம் நக்கீரர் உரைத்தனவல்ல வென்றும், அவை, புராணக்கதைகள் மிக்கெழுந்த பிற்காலத்தே யிருந்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டனவா மென்றும்.இவ் ஆராய்ச்சியா ரெல்லாம் உரைப்பக் காண்டலானும், அவ் வுரைப்பாயிரத்திற் கண்ட அவற்றுக் கெல்லாம் பழைய நூற் சான்றுகள் சிறிது மின்மையானும் அவை உண்மையென்று கொள்ளற்பாலன அல்ல.

“புறப்பொருள் வெண்பா மாலை”ப் பாயிரத்தில் அகத்தியனார் தொல்காப்பியனாரைப் பற்றிய இக் குறிப்புகள் காணப்படுதல் என்னையெனின், ‘புறப்பொருள் வெண்பாமாலை’ கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நூல் அன்றாகலின், புராணகாலத்து வந்த அந் நூற்பாயிரத்தில் அவை காணப்படுதல் ஒரு வியப்பன்று.

அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவர் எனவும், அப்பன்னிருவரும் ஒருங்குகூடிச் செய்த நூலே ‘பன்னிருபடல’மாம் எனவும், அப் ‘பன்னிரு படல’த்தின் வழித்தாகவே ‘புறப்பொருள் வெண்பாமாலை’ இயற்றப்பட்டது எனவும் அவ் வெண்பாமாலைப் பாயிரமாகிய “மன்னிய சிறப்பின்” என்னுஞ் செய்யுள் நுவலுதல் பொருந்தாது.

ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்தியர் மாணாக்க ரென்றலும் வெறும் கட்டேயாம்!

**க. வெள்ளைவாரணனார்:** இவர் தமது ‘தமிழ் இலக்கிய வரலாறு’ என்னும் நூலில் குறிப்பிடுஞ்செய்திகள்:

அகத்தியர் என்ற பெயருடைய முனிவர் பலர் வடநாட்டிலும் தென்னாட்டிலும் காலந்தோறும் பல இடங்களில் பேசப்பட்டுள்ளார்கள். தலைச்சங்கத்து நூலாகிய அகத்தியத்தை இயற்றியவர் தென்னாட்டிலேயே பிறந்து செந்தமிழ் பயின்ற சிறந்த புலவராதல் வேண்டும். அகத்தியருக்கும் தொல்காப்பியருக்கும் உள்ள தொடர்பினைத் துணிதற்கேற்ற சான்று எதுவும் நூலில் இல்லை. பின்னுள்ளோரால் காட்டப்பெறும் அகத்திய நூற்பாக்கள் தொல்காப்பியர் காலத்துக்கு மிகமிகப் பிற்காலத்தே இயற்றப்பெற்றனவாதல் வேண்டும்.

அகத்தியர் என ஆசிரியர் பெயரும் அகத்தியம் என நூற்பெயரும் இறையனார் அகப்பொருளுரைக் குறிப்பில்

காணப்படுவதனைக் கொண்டு அகத்தியருக்கு மாணவர் தொல்காப்பியர் எனத் துணியவியலாது. அகத்தியம் என்னும்பெயரால் எடுத்துக்காட்டிய நூற்பாக்களும், பேரகத்தியம் என்ற பெயரால் இக்காலத்து வெளியிடப் பெற்ற நூற்பாக்களும் மிகமிகப் பிற்காலத்தே அகத்தியர் பெயரால் வெளியிடப்பெற்றவையே!

**இரா. இராகவையங்கார்:** வேதகாலந் தொட்டுப் பிந்தியகாலம் வரை ஓர் அகத்தியர் பரம்பரை உண்டென்றும், அவ்வழியினருள் தமிழிலக்கணஞ் செய்தவரும் ஒருவர் உண்டென்றும், அவர் தொல்காப்பியனார் காலத்தவரென்றும், தமிழ் இலக்கண உரைகாரர் கூற்றால் துணியலாமென்று தெளிக.

இவ் வகத்தியர்க்கு முன்னே இத் தமிழ்நாடு இனிய செய்யுளாலும், நல்ல வழக்காலும் சிறந்து விளங்கிற்றென்று கருதுவதே பொருத்தமுடையதாகும்.. வேதகால அகத்தியர் இராமாயண கால அகத்தியர், பாரத கால அகத்தியர் எனப் பலராதல் தெளியலாம். இவ்வழியில் பாணினீய காலத்தவராய்த் தமிழுணர்ந்தவராய்த் தமிழ் இலக்கணமும் செய்த அகத்தியர் ஒருவர் உண்டு என்பது தான் இயைவதாகும் – என்கிறார்.

**ந.மு.வேங்கடசாமி நாட்டார்:** தமிழ்முனி என்று பலராலும் பாரட்டப் பெற்ற அகத்தியரைத் தமிழர் என அழைப்பதில் தவறில்லை என்பார்.

**கா. சுப்பிமரணியபிள்ளை:** தொல்காப்பியம் எழுத்ததிகார முன்னுரையில் அகத்தியர் இருவர் இருந்தனர் எனவும் அவர் இருவரும் பல்வேறு வகையில் வேறுபட்டு வாழ்ந்தவராவர் எனவும், பொதியமலை அகத்தியர் தமிழ்முனிவர் எனவும் குறிக்கின்றார்.

**பி. டி. சீனிவாச ஐயங்கார்:** இவர் 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் அகத்தியரைக் குறித்துக் கூறியுள்ள கருத்துகள்: 'இஷ்வாகு' காலம் முதல் 'கிருஷ்ணன்' காலம் வரையில் வடமொழி நூல்களில் கூறப்படும் அகத்தியர்கள், வசிட்டர்கள் ஆகியோர் தனிப்பட்ட அகத்தியரையோ வசிட்டரையோ குறித்தவர்கள் ஆகார். அப்பெயர்கள் குடும்பப் பெயராகப் பலருக்கு வழங்கியனவாகும். அப்பெயர்கள் குடும்பப் பெயரேயன்றித் தனிப்பட்டவர்களுக்குரிய பெயர்களல்ல.

**வி.கோ.சூரியநாராயண சாத்திரியார்:** "கருத்துக்கள் தன்முயற்சியானெழும் ஒலிகளின் சம்பந்தமாகவே வெளிப்படுகின்ற

இயல்பினின்றுமே பாஷைக ளுண்டாதலியலும் என்பது யாவரும் மறுக்கமுடியாததோர் பாஷைநூலுண்மை. இவ் வுண்மையை யொட்டியே தமிழ்ப்பாஷையின் தோற்றமும் ஏற்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கற்பாலதே.

ஃதிவ்வாறாக, தமிழ் நூலாசிரியர் பலரும், இக்காலத்தினும் ஆங்கிலநூற் பயிற்சியில்லாத நண்பருட் சிலரும் தமிழ்மொழியும் வடமொழியும் தேவபாஷைகளென்றும் இவ்விரண்டு முறையே அகத்தியனார்க்கும் பாணினியார்க்கும் சிவபெருமானால் உபதேசிக்கப் பட்டன என்றும் கூறாநிற்பர்.

**கால்டுவெல்:** இவர் தம் நூலான, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (தமிழ்) பக். 170 இல், "அவர் (அகத்தியர்) ஆரிய வந்தேறிகளின் தலைவர் என்று கூறுவதைவிட அக் குடியேற்றக் கட்டுக்கதைக்குத் தலைவரே யெனக் கூறலாம்" என்கின்றார்.

**உ.வே.சாமிநாதையர்:** "இவர் (அகத்தியர்) வருவதற்கு முன்னரே இந் நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தாரென்று கூறியிருப்பது உபசாரவழக்கு"

'*தமிழோடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்த கொடி*' (குமர.)

என்றதனாலும் அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்னமேயே அந்நாட்டில் இருந்த தமிழின் தொன்மை விளங்கும். (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்)

**பாவேந்தர் பாரதிதாசன்:** "அகத்தியன் விட்ட புதுக்கரடி" எனுந் தலைப்பில் அகத்தியர் பற்றிய சில குறிப்புக்களைப் புதிய நோக்கில் சுட்டியுள்ளார். பண்டைய திராவிடம் எனப்படும் தென்பகுதி எல்லா வகையிலும் சிறப்புற்றிருந்த காலத்து, அகத்தியர் ஆரியக் கோட்பாடுகளைப் பரப்பும் நோக்கத்துடன் தென்னாடு வந்தார் என்றும், பொதிகை மலையில் தங்கி, அங்கிருந்த தமிழ்ப்பெரும் புலவர்களிடம் இயற்றமிழ், இசைத்தமிழ், ஆடற்றமிழ் ஆகிய மூன்றனையும் முறைப்படி பயின்றார் என்றும் கூறியுள்ளார். மேலும், 'செல்வம் முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன்', சிறுமை, முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன். தீ, தீம்புனல், கடுவெளி ஆகியவை தெய்வங்கள். இந்திரன் எதற்கும் இறைவன். அவன் மந்திர வேள்வியால் மகிழ்பவன்' முதலான ஆரியக்கோட்பாடுகளை அகத்தியர் தமிழர்சர்களின் ஆதரவோடு தமிழ்மக்களிடையே பரப்பினார் என்றும், இறுதியாகத் தமிழரசர்கள் இக்கொள்கைகளையும் ஏற்று அகத்தியருக்கு அடிமையாயினர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அகத்தியர் வடக்கிலிருந்து வந்த

ஆசிரியர் என்றும், ஆரியக் கொள்கைகள் தமிழகத்துப் பரவியதற்கு இவரே அடிப்படைக் காரணம் என்றும், இவருடைய -வருகைக்குப் - பின்னரே தமிழ்க்கலை, பண்பாடு, 'நாகரிகம் 'முதலானவை அழிந்தன என்றும் சுட்டியுள்ளார்.

**அருணகிரியார், குமரகுருபரர்:** "*சிவனை நிகர் பொதியவரை முனிவ னகமகிழவிரு செவிகுளிர வினியதமிழ் பகர்வோனே*" என்பர் அருணகிரியார். தமிழ் முனிவன் வாழுமலை என்பார் குமரகுருபரர். அகத்தியரைச் சிவபெருமானோடு ஒப்பிட்டும், அவரைத் தமிழ் முனிவரென்றும் அவர்தம் இருப்பிடம் பொதியமலை என்றும் இவ்விருவர் கூற்றுக்களும் விளக்குகின்றன.

அகத்தியரைப்பற்றி ஆராய்ந்தவர்களுள் மு. இராகவையங் காரும், செகவீரபாண்டியனும் அகத்தியர் ஒருவரே என்னுங் கருத்துடையோர் ஆவர். கே. என் சிவராசபிள்ளை, துடிசைகிழார் அ. சிதம்பரனார், ந.சி.கந்தையாப் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார், ஆ.சிவலிங்கனார், ப.தங்கராசு, அ.மு.பரமசிவானந்தம், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், இரா. இராகவையங்கார், பி.டி.சீனிவாச ஐயங்கார் முதலானோர் அகத்தியர் பலர் என்னும் முடிவினைக் கொண்டவர்கள் ஆவர்.

'பிரபந்த இலக்கணம்' என்னும் சிற்றிலக்கிய இலக்கணத்தைக் கூறுகின்ற பாட்டியல் இலக்கண நூல்கள் எழுத்துகளுக்கும் பாவகைகளுக்கும் கூட ஏற்றத்தாழ்வு (இன்ன சாதிக்கு இன்ன எழுத்து, இன்ன சாதிக்கு இன்ன பா வகை எனக்) கூறுகின்றவை. இவை கூறும் செய்திகளிலும் அத்தகைய உணர்வு இருந்தால் வியப்பதற்கில்லை.

**முடிப்புரை:**

மேலே எடுத்துக்காட்டிய அறிஞர்களின் கருத்துகளையும் பிற நூல்களின் குறிப்புகளையும் கொண்டு ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால், கீழ்க்காணும் முடிவுகளுக்கு வரலாம்.

1.அகத்தியர் ஒருவரே என்று கருதுவது தவறென்றும் அகத்தியர் பெயரில் பலர் இருந்துள்ளனர் என்றும் தெரிகிறது.

2. அகத்தியர் என்னும் பெயரில் வடமொழி ஆரியஅகத்தியர்களும் தமிழ்அகத்தியர்களும் இருந்துள்ளனர்.

3. தமிழ்நாட்டில் அகத்தியர் என்னும் பெயரினைத் தாங்கி வாழ்ந்த அறிஞர் தமிழரே. பொதியமலை அகத்தியர் தமிழரே.

4. வடஆரிய அகத்தியர் காலத்திற்கு முன்பே தமிழ், இலக்கிய இலக்கணச் செழுமையுடன் இருந்திருக்கின்றது. (உ,வே.சா., இரா. இராகவையங்கார் கருத்தைக் காண்க)

5. அகத்தியம் முதனூல் என்ற கூற்று உறுதிப்படுத்தப் படாததாகும்.

6. தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்பதற்கு அடிப்படையான உறுதிச் சான்றெதுவும் இல்லை.

7. அகத்தியம் என்று ஒரு நூல் இருந்ததற்கான அடிப்படையான உறுதிச் சான்றெதுவும் இல்லை.

8.அகத்தியர் நூற்பாக்களாக உரையாசிரியர்களால் காட்டப்படும் நூற்பாக்கள் பிற்காலத்தில் பிறரால் எழுதப்பட்டவை.

9. (வடவாரிய) அகத்திய மாமுனி தமிழ்இலக்கியத்தை முதன்முறையாக எழுதியவர் என்றும் அவரின் திறம் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அடித்தளமாக இருக்கிறது என்றும் இந்திய ஒன்றிய அமைச்சர் கூறியது கலப்படமற்ற முழுப்பொய்யே.

இன்றைய அறிவியல்காலத்திலும் கூட, ஆட்சி அதிகாரம் தங்களிடம் இருக்கிற காரணத்தால், அந்த அதிகாரம், பெரும்பணவலிவு முதலியவற்றைக் கொண்டு, கூலி எழுத்தாளர்கள் கூட்டத்தையும், வாயை வாடகைக்கு விடும் முன்னாள் இந்நாள் பேராசிரியன்மாரையும் வளைத்துவிடுகின்றனர். அவர்கள் வழி அகத்தியர் பெயரால் பொய்ம்மைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, தமிழ்க் குமுகாயத்தை மூடஅடிமைகளாக்கிடவும், தமிழை மீண்டும் மூடநம்பிக்கைக் குப்பைக்குக் கொண்டுபோகவும், திட்டமிட்ட இந்தியஆட்சியாளர், இக்கால் விழிப்புற்றெழுந்த தமிழரின் எதிர்ப்பால் அமைதியாகி அடங்கியுள்ளனர் என்று அறியமுடிகிறது.

எவ்வளவு படித்திருந்தாலும் எத்தனை பெரிய அறிஞராயிருந்தாலும் தன்னலத்திற்கும் அறிவுக்கும் போட்டி என்று வரும்போது தன்னலம் வெற்றிபெற்று விடுகிறது; அறிவு தோற்றுவிடுகிறது என்று புரட்சியாளர் அம்பேத்கார் கூறியுள்ளார் என்று ஒருவர் புத்தகவிழாச் சொற்பொழிவில் கூறியதைக் கேட்க வாய்த்தது. ஆம், அதற்கு அகத்தியர் புரட்டுக்குத் துணை போனவர்களே சான்றாக உள்ளனர்.

*கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்.* -கு.116
*எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்*
*விற்றற் குரியர் விரைந்து.* - கு.1080.

உதவிய நூல்கள்:

1. K.N. Sivaraja pillai, ‘Agastya in Tamil Land’, Madras Law Journal press, Mylapore, Madraş.

2. கா.நமச்சிவாய முதலியார், ‘அகத்தியர் ஆராய்ச்சி’, குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு, 1931.

3. ந.சி.கந்தையாபிள்ளை, ‘அகத்தியர்’, ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1931.

4. செகவீரபாண்டின், ‘அகத்திய முனிவர்’, மதுரை, 1964.

5. துடிசைகிழார் அ.சிதம்பரனார், ‘அகத்தியர் வரலாறு’, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1964.

6. ஆ.சிவலிங்கனார், அகத்தியர்கள், ஒற்றுமை அலுவலகம், சென்னை, 1948.

7. முனைவர் ப.தங்கராசு, ‘தமிழ் இலக்கியங்களில் அகத்தியர்’, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1997.

8. அ.மு.பரமசிவானந்தம், ‘வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்’, வள்ளியம்மாள் கல்வி அறம், சென்னை – 102.

9. மறைமலையடிகள், ‘மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' 1957. கழக வெளியீடு,1980.

10. க.வெள்ளைவாரணனார், ‘தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்’, மாணவர் பதிப்பகம், சென்னை-7

11. உ.வே.சாமிநாதையர், ‘சங்கத் தமிழும் பிறகாலத் தமிழும்’, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை – 41, 1978.

12. பாரதிதாசன், ‘அகத்தியன் விட்ட புதுக்கரடி, நல்லமுத்துக் கதை’ பாரதிதாசன் பதிப்பகம், 1948.

13. இன்னும் பலரின் குறிப்புகள்.

உதவிய அனைவர்க்கும் நன்றி

(அகத்தியர் புரட்டு – முற்றுப்பெற்றது)

# நினைவேந்தும் இறையேத்து!...

- பேராசிரியர் அருளியார்

முத்தரையர்ப் பாளையம் - அதன்
முன்ன ரொருபெரும் ஏரியி ருந்தது; - அம்
மூலைக் கரை யினிலே - கட்டு
மூளியுற்றே சிறு ஓட்டை யுற்றே - நீர்
முற்பட்டொ ழுகிய தால் - அதன்
முற்பெய ராகவே ஒழுகுக ரையென
முன்னர்உ  ரைக்கப் பெற்றே - பின்
உழவர்கரையென வேஉருக் கொண்டது! ஆம்!

அக்கரை யோரத்தி லே - ஆர்
அழகிய சாலைத்தெ ருவினிலே - **முனி
சாமி**யெனுந்திரு வாளருக்கும் - நறுஞ்
சாந்தமகள் அருங் கண்ணம் மைக்கும் - ஒரு
சால்புத் திருக்கரு நேர் - ஒளி
சேர்ந்துபி றந்தது வாதனூரில் - அது
சார்ந்துவ ளர்ந்ததுவோ; - பழஞ்
சோலைநி கர்த்தவோர் சாலைத்தெ ருவினில் - ஆம்!

மூத்தத லைப்பிள்ளைக் கே - அம்
முத்துக்கென் றேயிரு பெற்ற வரும் - ஒரு
கோத்தஇ ணைப்பெய ராய்த் - தமைச்
சேர்த்தி ணைத்தேயருஞ் “**சாமிக்கண்ணு**” - எனச்
சார்த்திம கிழ்ந்தன ரே! - இதன்
நேர்த்தி பெறும்புது நேயந றுமணம்
யார்க்குவி ளங்கு மையா?!...  மகிழ்
வார்க்குந்தி ருப்பெயர் சூட்டியர் போற்றுவ மே!

தங்கையி ருவ ரொடும் - இருந்
தம்பியர் மூவரும் பின்னிப்பி ணைந்திடும்
பொங்கும் உடன்பிறப் போர் - போர்வுப்
பொன்மனக் கூட்டினுள் பொருத்தத்து றவினுள்
தங்கிவ ளர்ந்தவ ராம் - நமின்
தலைமக னாரிவர் "சாமிக்கண்ணு" - எனும்
தங்கம னத்தவ ரே! - உயர்
தண்ணிய தன்னெஞ்சில் தண்டமிழ் கொண்டவர்-ஆம்!

அன்பிற்சி றந்தவ ராய்த் - தமிழ்
அறிவினை யார்ந்திடற் கான்றவங் காந்தநற்
பண்பிற்ப டிந்தவ ராய்த் - தொண்டுப்
பணியினி லின்பினைக் கொண்டுதி கழ்ந்திடும்
நன்மனப் பாங்கின ராய் - ஊரில்
நன்னெறி மன்றினைத் தோற்றுவித் தே - நமின்
கண்மணி மாணவர்க் கே - இராக்
கல்வியகங் கண்டு தன்கடன் ஆற்றிய - தே!..
(தே = தெய்வம்)

வாராது வந்தஇம் மாணிக்க மாகிய
    வல்லிய நல்லிறை விழிய னாரிவர்
ஓராசான் பள்ளி நரம்பையி லாம் - அங்கு
    ஆசானாகிமிக முன்னேறியே - மாறி
ஊராக வூராக மேலுஞ்சென் றேயாண்டு
    மேலும்மேலும்பல பட்டம் பெற்றே
சீராகவே தகு செம்புலவோ ராகிச்
    செம்மாப்பொடு சிறந் தோய்வு பெற்றார்!...

முப்பத்தே ழாண்டுப் பணியினிலே - கல்வி
    முன்னேற்றங் காணவு ழைப்பெ டுத்தார்! - உயர்
செப்பத்தமிழ்த் தொண்டை யாற்றிடவே - மறுஞ்
    சீறும் போ ராளியாய் மாறிநின் றார்!
எப்பொழுதுந்தமிழ் எண்ணங்கொ ண்டே - அதன்
    ஏற்றத்திற் கேமிக  ஊற்றங் கொண் டார் - திறஞ்
செப்பரிதாம் நெடுஞ் சீர்முறை யாளுமை
    சேர்ந்தபு யற்பணி யாற்றிநின் றார்!

தெளிதமிழ் நற்றமிழ் - தூய்
நல்லத மிழ் எனும் பல்லவ கையிதழ்
வலிவளத் தாசா னாய் - மிகப்
பொலிவுற - திறனுற பொறையுற வே - அவை
விளைவுற வெனவுழைத் தே மிகு
வீறொடு நந்தமிழ் விளங்குதற் காகவே
களிவுறக் கடனாற் றி - நாம்
கனிவொடு பயன்கொளக் கனிவளர்த் தாரிறை யே!

காதல்ம ணம்புரிந் தார் - கொடுஞ்
    சாதிம தந்துறந் தேயவை மோதியே
ஈதல்லவோ முறைகாண்!... - என,
    ஏற்றநற் கொள்கையை நோற்றிருந் தாரவர்
யாதன்மு றையிலும் எந்தப்பொ ழுதிலும்
    யாண்டுமே முற்படங் காட்டிக்கொண் டாரலர்!
சாதல்வ ரையிலும் சாந்தம னத்துடன் - தான்
    சார்ந்திருந்த கொள்கை நேர்ந்திருந் தாரி றையே!...

**உருப்பெற்ற இவரை**
**ஒருப்படத் தொழுது**
**உருப்பட நினைகிறோம்!...**
**இறைமழையில் நனைகிறோம்!...**

அரியநா யகியெனும் அரிய தாய் தனையும்
நெறிசெல்வ ரத்தினம்என் நேரிய தாய் தனையும்
ஒருசேர அகங்கொண்டு ஓர்மையுளம் மணங்கொண்டு
அறுமக்க ளீன்ற பெரும் பண்புறைமேம் பாட்டினரை -
நறுமணத்துக் குளிர்ச்சியரை - நல்லதமிழ் நெஞ்சினரை -
அன்புருவ ராய்ச் சிறந்த ஆற்றல்செறிந் தினித்தவரை -
திருவாழ்க்கை வாழ்ந்தியன்ற இறைவிழிய னாரிவரை
உருப்படுத்தி நிறுத்தினம்யாம்! உருப்படவே தொழுகின்றோம்!...

**பாட்டுக்கள் உள்ளே படிந்துள்ளவாகிய சொல் அடுக்குகளின் பிரிப்பும் - அவற்றுள் படும் அருஞ்சொற்கள் சிலவற்றின் பொருள் குறிப்பும்!...**

1. **(பிரிப்பு)**

முத்தரையர்ப் பாளையம் - அதன் முன்னர் ஒரு பெரும் ஏரி இருந்தது! அம் மூலைக் கரையினிலே - கட்டு மூளி உற்றே - சிறு ஓட்டை உற்றே - நீர் முற்பட்டு ஒழுகியதால் - அதன் முன் பெயராகவே “ஒழுகுகரை” என, முன்னர் உரைக்கப்பெற்றே - பின் “உழவர்கரை” எனவே உருக் கொண்டது! - ஆம்!

**அருஞ்சொற்பொருள்**:

கட்டு = மண்ணாற் கட்டப்பெற்ற கரைக் கட்டு
உற்றே = அமைந்தே, பெற்றே

முற்பட்டு = முன் அமைவாகி - மேற்பட்டு
முற்பெயர் = முன்னர் வழங்கிய பெயர்
உருக்கொண்டது = பெயர் (உருக்) கொண்டது

2. **(பிரிப்பு)**

அக் கரை ஓரத்திலே - ஆர் அழகிய சாலைத்தெருவினிலே - முனிசாமி எனும் திருவாளருக்கும் நறும் சாந்தமகள் அரும் கண்ணம்மைக்கும் ஒரு சால்புத் திருக்கரு நேர் - ஒளி சேர்ந்து பிறந்தது வாதனூரில் - அது சார்ந்து வளர்ந்ததுவோ பழம் சோலை நிகர்த்த ஓர் சாலைத்தெருவினில் - ஆம்! (ஐயா கருக்கொண்டது - சாலைத்தெரு ஊரில் - உருக்கொண்டு பிறப்புற்றது வாதானூரில் - )

**அருஞ்சொற்பொருள்**:

அக் கரை = அந்தக் கரை
நறும் = நறுமணம் மிக்க
சாந்து-சாந்தம் = சந்தனம்
அரும் = அரிய, அருமையான
கண்ணம்மை = கண்ணம்மாள்
சால்பு = பண்பு; பண்பாடு
திரு = அழகிய
வாதனூர் = மண்ணடிப்பட்டு வட்டம், வாதானூர் [ஐயா பிறந்தநாள் தி.பி. 1963-கடகம் (ஆடி)11ஆம் நாள் (27-7-1932)]
பழம்சோலை = (பழம் = பழைய) சோலை = பூங்காடு, பூங்கா
நிகர்த்த = நிகரான, நேரான, ஒத்த, ஒப்பான
ஆம் = ஆகும்

3. **(பிரிப்பு)**

மூத்த தலைப்பிள்ளைக்கே - அம் முத்துக்கு என்றே இரு பெற்றவரும் - ஒரு சேர்த்த இணைப்பெயராய்த் - தமைச் சேர்த்து இணைத்தே அரும் “சாமிக்கண்ணு” எனச் சார்த்தி மகிழ்ந்தனரே! இதன் நேர்த்தி பெறும் புது நேய நறுமணம்

யார்க்கு விளங்கும் ஐயா?!... மகிழ்வு ஆர்க்கும் திருப்பெயர் சூட்டியர் போற்றுவமே!

**அருஞ்சொற்பொருள்**:

இருபெற்றவரும் = இரண்டு பெற்றோரும்;
பெற்றோராகிய இருவரும்
தமை = தம்மை
சார்த்தி = பெயர் சூட்டி
ஆர்க்கும் = கட்டியிணைக்கும்
சூட்டியர் = பெயர் சூட்டியவர்களாகிய பெற்றோர்

**4. (பிரிப்பு)**

தங்கை இருவரோடும் - இருந் தம்பியர் மூவரும் பின்னிப்பிணைந்திடும் பொங்கும் உடன்பிறப்போர் - போர்வுப் பொன்மனக் கூட்டினுள் - பொருத்தத்து உறவினுள் தங்கி வளர்ந்தவராம் - நமின் தலைமகனார் இவர் "சாமிக்கண்ணு" எனும் தங்க மனத்தவரே! - உயர் தண்ணிய தன்நெஞ்சில் தண்டமிழ் கொண்டவர், - ஆம்!

**அருஞ்சொற்பொருள்:**

இரும் = பெரிய; பெருமைக்குரிய
உடன்பிறப்போர் = உடன்பிறந்தார்
போர்வு = கவிந்த அணைப்பு
நமின் = நம்மின், நம்முடைய
தண்ணிய = குளிர்ந்த
தண்டமிழ் = < தண் + தமிழ் = குளிர்மையை
ஏற்படுத்தும் இயல்பு வாய்ந்த தமிழ்மொழி

**5. (பிரிப்பு)**

அன்பில் சிறந்தவராய் - தமிழ் அறிவினை ஆர்ந்திடற்கு ஆன்ற அங்காந்த நல்பண்பில் படிந்தவராய் - தொண்டுப்பணியினில் அன்பினைக் கொண்டு திகழ்ந்திடும் நல் மனப்பாங்கினராய் - ஊரில் நன்னெறி மண்றினைத் - தோற்றுவித்தே நமின் கண்மணி மாணவர்க்கே - இராக் கல்வியகம் கண்டு தன் கடன் ஆற்றிய தே!

**அருஞ்சொற்பொருள்:**

ஆர்ந்திடற்கு = நிறைவதற்காக

ஆன்ற = அகன்ற; பெரிதாகி நிற்கின்ற

அங்காந்த = விருப்பத்தாலாகிய ஏக்கங்கொண்ட

படிந்தவராய் = ஒன்றியவராய்

திகழ்ந்திடும் = ஒளிர்ந்திடும்

மனப்பாங்கினராய் = மனஇயல்பு வாய்ந்த பான்மையினராய்

நன்னெறிமன்று = "நல்நெறி மன்றம்" என்னும் பெயரில் ஐயா உருவாக்கிய அமைப்பகம்

தோற்றுவித்து = உருவாக்கி

நமின் = நம்மின்; நம்முடைய

கடன் = கடமை

தே = தெய்வம்; இறைவிழியனார்

இராக்கல்வியகம் = இரவில் (மாலையிரவில்-) நடத்தப் பெறும் இரவுப்பள்ளி (மன்றம் தொடங்கிய காலம் 1952)

6. **(பிரிப்பு)**

வராது வந்த மாணிக்கம் ஆகிய - வல்லிய நல் இறைவிழியனார் இவர் - ஓராசான் பள்ளி நரம்பையில் - ஆம் - அங்கு ஆசானாகி மிக முன்னேறியே - மாறி ஊராக ஊராக மேலும் சென்றே - ஆண்டு மேலும் மேலும் பல பட்டம் பெற்றே - சீராகவே தகு செம்புலவோர் ஆகிச் செம்மாப்பொடு சிறந்து ஓய்வு பெற்றார்

**அருஞ்சொற்பொருள்:**

வாராது வந்த மாணிக்கம் = எதிரில் வருவது கண்ணுறல் வாயாமலேயே வந்து சேர்ந்த அரிய மாணிக்கக் கல் (Ruby, Carbuncle)

வல்லிய = வலிமை வாய்ந்த

ஓராசான் பள்ளி = ஓர் ஆசிரியர் மட்டுமே இயங்குகின்ற பள்ளிக்கூட வகை

ஆசான் = ஆசிரியர்

மாறி = பல்வேறு பள்ளிகளுக்கு மாற்றம் பெற்றவராகி (அப்படியாக - மாற்றம் பெற்றுச் சென்ற பள்ளியில் ஒன்று, உருவையாறு அரசு தொடக்கப்பள்ளி என்னும் பெயரில் இருந்த தொடக்கப்பள்ளி அங்கே பணிபுரிந்த காலத்தில்தான் - ஐயா அவர்கள் இளம்புலவர், புலவர் (சென்னை), புலவர் (மதுரை) தேர்வுகளெழுதிச் செம்புலவர் தகைமை எய்தினார்!)

செம்மாப்பு = பெருமித வீறு

7. **(பிரிப்பு)**

முப்பத்தேழு ஆண்டுகள் பணியினிலே - கல்வி முன்னேற்றம் காண உழைப்படுத்தார் - உயர் செப்பத் தமிழ்த்தொண்டை ஆற்றிடவே - மறம் சீறும் போராளியாய் மாறி நின்றார் - எப்பொழுதும் தமிழ் எண்ணம் கொண்டே - அதன் ஏற்றத்திற்கே மிக ஊற்றம் கொண்டார் - திறம் செப்ப அரிதாம் நெடும் சீர்முறை ஆளுமை சேர்ந்த புயல்பணி ஆற்றி நின்றார்!

**அருஞ்சொற்பொருள்**:

முப்பத்தேழாண்டுகள் (ஆசிரியர்-) பணி: (07.02.1956இல் (அரசு-) இடைநிலை ஆசிரியர்ப் பணி நரம்பைச் சிற்றூர் - அக் கால் - நரம்பைச் சிற்றூர் நெருக்கிடையானதும் - சாலை ஏந்துகளுமற்றதுமான இக்கட்டு ஊர். அங்குப் பள்ளி எனக் கட்டப்பெறாதிருந்து - அவ்வூர்க் கோயில் ஒன்றனுள்தான் ஐயா பணியாற்றச் சென்ற பள்ளிச் செயலிடம் இருந்தது - சாலை ஏந்தின்மையால் அப் பள்ளியானது சேலியமேட்டை அடுத்த ஆதிங்கப்பட்டு எனும் ஊரில் கட்டப்பெற்றது. குறுகிய கால ஆசிரியர்ப் பயிற்சியை இடையில் முடித்துவிட்டு ஆதிங்கப்பட்டுப் பள்ளியில் மீண்டும் ஓராசிரியப் பள்ளி ஆசானாகப் பணியேற்றார்! (பணியேற்று மீண்டும் தொடங்கியது 16.6.1956இல்.) - ஓய்வு பெற்ற நாள் 31.07.1992 பணியிடைக்காலம் முப்பத்தாறாண்டுகள் ஐந்து திங்கள் இருபத்தாறு நாள்கள்)

ஊற்றம் = உள்ளெழுச்சித் தொடர்ச்சி

(ஊறு > ஊற்று > +அம் > ஊற்றம்)

செப்ப அரிதாம் = சொல்லுவதற்கு அரிதாகிய

புயற்பணி = சூறைவளி (சூறாவளி) போல் சுழன்று ஆற்றி இயன்ற ஆசிரியர் பணி

ஆற்றுதல் = மிகச் செயற்படுதல்

8. **பிரிப்பு**

தெளிதமிழ் நற்றமிழ் தூய் நல்லதமிழ் எனும் பல்லவகை இதழ் வலி வளத்து ஆசானாய் மிகப் பொலிவுற திறனுற பொறை உறவே அவை விளைவுற என உழைத்தே மிகு வீறொடு நம் தமிழ் விளங்குதற்காகவே களிவுற - கடன் ஆற்றி நாம் கனிவோடு பயன் கொளக் கனி வளர்த்தார், இறையே!

**அருஞ்சொற்பொருள்**:

பல்ல = பல

வலி வளத்து ஆசான் ஆய் = வலிமை வளம் வாய்ந்த ஆசிரியனாகி திறன் உற = திறமை அமைய

களிவு = களிப்பு, மகிழ்ச்சி

கடன் = கடமை

கனிவு = பதன்பெற்ற முதிர்வுநிலை

கனி = பழம்

இறை = இறைவிழியனார்

9. **(பிரிப்பு)**

காதல் மணம் புரிந்தார் - கொடும் சாதி மதம் துறந்தே அவை மோதியே ஈது அல்லவோ முறை காண்! - என ஏற்ற நல்கொள்கையை நோற்றிருந்தார் அவர் - யாதன் முறையிலும் எந்தப் பொழுதிலும் யாண்டுமே முற்படம் காட்டிக் கொண்டாரலர் சாதல் வரையிலும் சாந்த மனத்துடன் - தான் சார்ந்திருந்த கொள்கை நேர்ந்திருந்தார், இறையே!

**அருஞ்சொற்பொருள்:**

துறந்தே = நீங்கி, நீங்கியே, கைவிட்டே

ஈது = இது
நோற்றிருந்தார் = தவமுயற்சிபோல் கடுமுயற்சி
மேற்கொண்டார்
யாதன்முறையிலும் = எதன் முறையிலும், எவ்வகை முறையிலும் யாண்டுமே = எவ்விடத்திலுமே
முற்படம் காட்டிக்கொண்டாரலர் = தான் முற்படத் தெரியுமாறு படங் காட்டிக் கொண்டாரலர் = கொண்டவர் அல்லர்! (அப்படிப்பட்ட இயல்பினர் அல்லர், என்றவாறு)
சாந்த = அமைதி வாய்ந்த
இறையே = இறைவிழியனார் என்னும்
தெய்வமாகிய இவரே!

**‘உடன்படுஉயிர்மெய்’ நூலாசான் செந்தமிழ்வாணர் அரிமாப்பாண்டியன் ஐயாவின்- அன்புக்கு அகமகிழ்வும் திருமனத்தின் அருமைக்கு வணக்கமும் - வாழ்த்தும்!...**

புதுவையம் பதியில் தூய
பூமனத் தினிய நேயன்!
மதுகையை - மாண்பை - அன்பை
மானமார் குணத்தை - வீற்றை
எது தமிழ்க் கெதிரென் றாலும்
எரிமலை வெடிப்பின் வீச்சை
எதுபோது நினைப்பி னும் ஆங்
கேறு-போர் அரிமா நிற்பார்!...

இறைவிழிச் சான்றோர் காக்க
எண்ணமும் உணர்வும் ஊக்க
நிறைவொடும் விரைவி னோடும்
நெடுங்கடன் பற்றார் வோடும்
குறைவிலா தியன்ற நல்லோன்!
கொள்கையில் செயலில் வல்லோன்!
முறையுறத் தூய நெஞ்சால்
முன்வைத்த நூற்கெம் நன்றி!

**திரு. செல்வமணிக்குத் தெரிவிக்கப்பெறும் குடும்ப நன்றி!**

நாமெலாம் அக்கம் பக்கத்
திருந்திங்கு விரைந்து வந்தோம்!
ஆமெலாம் வந்தே சேர்ந்தோம் !
ஆயிரம் - ஆயி ரங்கல்
ஆமெனும் தூரச் சேணின்
றாங்கிருந் தீண்டே வந்து
யாமெலாம் வியக்கச் **செல்வ**
**மணி**மகன் உள்ளார்! நன்றி
(தூரம் + சேண் + நின்று +
ஆங்கு + இருந்து + ஈண்டே + வந்து-)

**தமிழ்ச்சான்றோர் - 'நற்றமிழ்' ஆசிரியர்**
**அ.தெ. தமிழநம்பி ஐயா**
**நற்றமிழ் அன்பர்கள்**
**ஆகியோர்க்கான நன்றியுரைப் பா!**

இறைவிழியத் தொண்ட ரோடே
இனிய நன் னட்பா யேய்ந்தே
நிறைதமிழ்க் கொள்கை சார்ந்த
நீர்மையால் தோய்ந்தே யார்ந்த
உறைவுளச் சான்றோர்க் கெல்லாம்
உயிராரும் உவப்பு! நன்றி!
நிறைவார் நற்றமிழ ஏட்டின்
நேரியர் தமிழ நம்பித்
துரையார்க்கு உறவார் நன்றி!
தூயன்பர்க் கெல்லாம் நன்றி!

தமிழையே உயிராய்க் கொண்டு
தமிழ்க்கென வாழ்வைத் தந்து
அமிழ்தநல் லுறவார் மக்கள்
அரும்பெயர் மரபார் சூழ்வில்
அமிழாத தொண்டில் தோய்ந்து
அரிய சான்றாகி நின்ற

தமிழொன்று சிலைசார்ந் தொன்றித்
தமர்நெஞ்சுள் நிலைத்த தின்று!

(தமிழ் + ஒன்று > தமிழொன்று)
(தமர் = தம்மர் = தம்முடையவர்கள்)

**சிலைஞர் இரா. அருளிக்கும்**

**கலைஞர் இமயவரம்பனுக்கும்**

**அன்பு நன்றியுரைப்பு!**

அருளியார் என்னும் என்னின்
அரும்பெருஞ் செழியச் செம்மல்
அருளிய பெயரால் பெற்ற
**அருளி**யே இன்று நிற்கும்
அருங்கலைச் சிலையை நன்றாய்
அமைத்தளித் துவந்து நின்றோன்!...

உருவாக்க உடனு ழைப்பில்
உற்றவோர் துணையர் - தூயர் -
திரு**இமய வரம்பன்** என்னும்
தீந்தமிழ் வளவன் சேர்ந்தார்!
இருபெருந் திறவோர்க் கெம்தம்
இனியநன் னன்னன் னன்றி!

# நூல் அறிமுகம்

நூல்: **அருங்குறட்பா ஆயிரம்**. பக்கம்: 112.. விலை: உருவா நூறு.
ஆசிரியர்: **புலவர் சி. பெருந்தேவன்** (சி. இராமலிங்கம்).
தவளக்குப்பம், புதுச்சேரி – 605 007. கைப்பேசி: 89408 99885.

கடலூரிலிருந்து பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ் ‘தென்மொழி’ வெளிவந்த காலத்தில், புலவர் சி. பெருந்தேவன் (சி.இராமலிங்கம்) அவ் விதழில் கட்டுரை எழுதியவராவார். தனித்தமிழ் ஈடுபாடு கொண்டவர்: யாப்பு கெடாது பாட்டெழுதும் ஆற்றலுடையவர். பாவலர் பெருந்தேவன் தம் 83ஆம் அகவையில், அண்மையில் குறள்வெண்பா யாப்பில் எழுதிய ஆயிரம் பாக்களைக் கொண்ட நூல் ‘அருங்குறட்பா ஆயிரம்’ என்னும் நூலாகும்.

இந் நூல், ‘ஆட்சி புரிவார்க்கு (240), வாழும் மக்களுக்கு (270), அரசியல்வாணர்க்கு (110), ஆயும் அறிஞர்க்கு (60), மங்கல மகளிர்க்கு (20), வளரும் இளைஞர்க்கு (100), அலுவல் புரியும் அதிகார வர்க்கத்தினருக்கு (20), தொழிலும் தொழில்துறையும் (40), காவல்துறையினர்க்கு (20), நீதித் துறையினர்க்கு (20), மருத்துவத் துறையினர்க்கு (20), பகுத்தறிவுடைமை (20), போரும் வன்முறையும்(50), புலம்பெயர்ந்தோர் துயர்(10) என்னும் பதினான்கு தலைப்புகளைக் கொண்டிருக்கின்றது. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள எண்கள் அவ்வத் தலைப்புகளில் உள்ள குறட்பாக்களின் எண்ணிக்கையாகும்.

பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள குறள்கள் சிறப்பாகத் தலைப்பை ஒட்டியவர்களுக்கான கூற்றுகளாக இருப்பினும் பொதுவாக அனைவர்க்கும் பொருந்தும் தகைமையனவாக உள்ளன.

*ஆறவழியில் சென்றிங்கு அடைவதுவே வெற்றி*
*பிறவழியில் செல்லல் பிழை.* – எனும் குறள் ஆட்சியாளர்க்கே சிறப்பாகக் கூறிய ஆறன்வலியுறுத்தல் ஆகும்.

‘மானமும் அறிவும் மாந்தர்க்கு அழகு’ என்றார் ஈ.வெ.இரா. பெரியார். அதை வலியுறுத்தும் வகை,

*மானம் அறிவிரண்டும் மாந்தர்க்கு அழகென்ப*
*வானம் வரை உயர்க வாழ்ந்து.* – எனும் குறள் கூறல் சிறப்பு.

கையூட்டு என்னும் கொடுங் குமுகக் கேட்டை எதிர்க்கும் குறள்:

*கடமை புரிவதற்குக் கைக்கூலி கேட்கின்ற*
*மடவரைத் தூற்றும்இம் மண்.*

'மடவர்' என்னும் சரியான சொல்லாட்சி படிக்க மகிழ்வளிப்பதாகும்.

மக்களை எச்சரிக்கும் குறள் ஒன்று:

*விழிப்பாய் இருப்போரே வெற்றிபெறல் கூடும்*
*அழிப்பார் பலராக லான்.*

சாதிக்கொடுமை தீர, ஆட்சியாளரை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும் குறள்:

*சாதி வெறியுணர்வைச் சட்டத்தால் வீழ்த்திடுக*
*'போதை'ப் பொருள் ஒழித்தல் போல்.*

பெண்ணுரிமை போற்றும் குறள் இது:

*சட்டத்தால் பெண்டிர் சரிபாதி வாய்ப்புறவே*
*திட்டமிடல் ஆட்சிச் சிறப்பு.*

தமிழ்வழிக்கல்வியை வலியுறுத்தும் குறள்:

*பயிற்று மொழியாக்கிப் பைந்தமிழை ஓம்பி*
*இயற்றுக நல்லாட்சி இங்கு.*

பல்வேறு குறள்களில் காணப்படும் நல்ல கருத்துகளை எடுத்துக்காட்ட விரும்பினும், விரிவஞ்சி நிறுத்துகிறோம்.

தூயதமிழ் ஈடுபாட்டாளரான பெருந்தேவன், மானியம், உற்பத்தி, ஆதிக்கம், போதை, நிருவாகம், வர்க்கம், சர்வாதிகாரம், அகதி முதலான பல அயற்சொற்களை அடுத்த பதிப்பில் தவிர்த்து விடுவார் என நம்புகிறோம்.

*நெகிழிக்(கு) ஏதும் நிகரில்லை ஆள்வார்*
*இகழாது) அதைப்போற்றல் இன்பு.* – என்னும் குறளில் நடைமுறைப் பயன்பாட்டில் தீங்களிக்கும் ஞெகிழிக்குப் பரிந்துரைக்கும் முரணான பொருளைத் தவிர்த்திருக்கலாம்.

திருவள்ளுவருக்குப் பின்னர் அரிதாக விரல்விட்டு எண்ணத்தக்க எண்ணிக்கையினரே குறள்வெண்பாவில் நூல் எழுதியுள்ளனர். (வ.சுப.மா. எழுதிய 'மாணிக்கக் குறள்', திரு.வி.க. எழுதிய 'கிறித்து மொழிக் குறள்' முதலான நூல்கள்). அந்த வகையில் பொருள் பொதிந்த ஆயிரம் குறள்கொண்ட அரியதொரு நூலைத் தந்த பெருந்தேவன் அவர்களை நற்றமிழ் பாராட்டி வாழ்த்துகின்றது. தமிழுலகம் நூலைப் படித்துப் பயன்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றது.

# பெயர் பற்றி ஓர் அறை!....

## - பேராசிரியர் அருளியார்

பிறமொழிப் பெயரைத் தாங்குதல் என்பதன்வழி, அதனைச் சூட்டிக்கொண்டவன் தன்னையறியாமலேயே மானங்கெட்டவனாக மாறிவிடக்கூடிய சூழ்நிலையையும் உடன் பெறுகின்றான்!. அத்தகு தீவாய்ப்பை, அப் பெயரே அவனுக்கு வழங்கி நின்று, வழிநடத்தவுந் தொடங்கிவிடுகின்றது! தாய்மொழியை மதியாத ஒருவன் - தன் தாயையும் மதியான்!... தாய்நாட்டையும் மதியான்! தன் இனத்து மரபு வரலாற்றைத்திரும்பியும் பாரான்!.

தன் பெயருக்கே பொருள் தெரியாத புரியா முட்டுக்கட்டையனாக முதற்கண்ணாக அவனை ஆக்கிவிட்டுப் - பொருள் பொதிந்தவனாகவும் தெளிவு வாய்ந்தவனாகவும் அவனையே உருவாக்குவது என்பதும், எப்படி இயலும்?!...

(பிச்சை - பிச்சாண்டி - பிச்சைக்காரன் என்றவாறெல்லாம் இழிநிலைப் பெயரீடுகள் பெற்றவர்களில் மிகப் பெரும்பாலரும் - இரங்கத்தக்க தாழ்நிலையிலேயே திணறியவாறு கிடக்கின்றமையை மிகப் பெரும்பாலும் காணுகிறோமே! பிச்சைவீரன் என மீசையை முறுக்கி மேலேற்றிக் கொண்டவனுங்கூடத் தன்னை தாழ்நிலையினின்று தலையெடுத்தவனாகிக் கொண்டு தப்பிக்க இயலாதே! தமிழிலேயே ஆயினுங்கூட உயர்பண்பு வாய்ந்த ஒண்டமிழ்ச் சொற்களாலாகிய பெயர்களையே சூட்ட வேண்டும்! மத அடிப்படைச் சேற்றில் சிக்கி உலைவுறும் கல்வியறிவில்லாத சிற்றூர்ப்புறங்களில் - பாவாடை, பாவாடைசாமி, பாவாடைராயன் என்பன போலும் பெயர்களில் ஒன்றைச் சூட்டிக்கொண்டு அசைந்தாடிக் கொண்டு ஒயில்நடை இட்ட பயல்களில் எவன் எங்கு உருப்பட்டான்? மேனின்றான்?!...)

“பூ” என்பது, இந் நிலவுலகம்! வராகம் என்பது பன்றி! (சாய்க்கடையில் மூக்கைவிட்டு நுளப்பும் சேற்றுப்பன்றி! பூவராகன் என்பது நிலப்பன்றியான் என்பதனை மட்டுமே குறிக்கும் கூட்டுச்சொல் என்பது, எத்துணைப் பூவராகன்களுக்கு இம் மண்ணகத்தில் தெரியும்? பூவராக சாமிகளுக்கும் தெரியாது; பூராசாமிகளுக்கும் தெரியாது? தெரிந்தால், நாணத்தில் தலைகவிழ்ந்தவாறுதாமே அவர்களால் நடக்க வேண்டியிருக்கும்!

நவநீதம் என்பது சமற்கிருதச்சொல் என்றும் அதற்குப் புதுவெண்ணெய் என்பதுவே பொருள் என்றும் தெரிந்திருந்தால், எந்த வெண்ணெயாவது அப் பெயரை சூட்டிக் கொள்ளுமா?!! (நவநீத கிருசுணன் = வெண்ணெய் திருடித்தின்ற கருப்பன்!...)

கேசம் என்பது மயிர்! கேசவன் எனில் மயிரான் என்பதுவே பொருளாகும் என்பது தெரிந்தால், எம் மயிரானாவது அதனைச் சூட்டிக் கொண்டு சிலிர்ப்பி விட்டுக்கொண்டு திரிவானா?

ஏன்... இவ்வகைக் கோளாற்றுச் சாய்கடைக்குள், நம்மினம் வீழ்ந்து தத்தளித்தவாறு கிடக்கின்றது?!... மானக் கேட்டிற் சிக்கியவாறு தவித்துத் திணறுகின்றது?! எண்ணிப் பார்க்கவேண்டும்!...

இதற்கொரு விடிவு வேண்டாவா?....

(நன்றி :- **“தமிழில் பெயரிடுவோம்”** எனும் நூலுக்கான அணிந்துரையுள் ஒரு பகுதி (சனவரி - 2013)

## *இயற்பியல் - இயல்பியல் - பௌதிகம் - பூதவியல் . . . இவை சரிதாமா ? ! . . . .சரியில்லை எனில் எதுதான் சரி ? . . . .*

*அறிவுநுட்பம் மிகவும் கூர்த்த வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் விரைவார்ந்த அறிவியற்சூழல் வாப்புடைய காலத்தில், நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்! நொடிக்கு நொடி அறிவு விளர்ந்து விரிவடைந்துவரும் இக்காலத்தில், தாமொழியிலேயே அறிவு பெறவேண்டிய இன்றியமையாத் தேவையை உணரத் தலைப்படும் அறிவு, -- காலங்கடந்து நமக்குத் தோன்றியுள்ளது! தமிழகமக்களின் கல்விவளர்ச்சி, அறிவுவளர்ச்சி முதலியனபற்றிக் கவலையும் அக்கறையும் கொண்டு, பாடநூல்களைச் செம்மையாக வெளிப்படுத்தவேண்டும் என்று துடிக்கின்ற நாம் -- அவற்றிற்குரிய தலைப்புப்பெயர்களே - துறைப்பெயர்களே இன்னும் செப்பநிலை எதாதிருக்கும் அவலநிலையையும் மனத்திற்கொண்டவாறே நடையிடவேண்டும் - அத்துடன் வேண்டிய உரிய திருத்தங்களை உடனடியாகச் செதுகொள்ளவேண்டும் என்பவற்றிற்காகவே, வினவலான இக் கருத்தோட்டக் கட்டுரை, முன்வைக்கப் பெறுகின்றது! முதல் தொடர் -- இது !...*

*பொருள் மற்றும் ஆற்றல் இவற்றிற்கிடையிலான ஊடெழுவினைகள் பற்றியதும் -- பொருள்களோடு தொடர்புடையதுமான ஆவியலாகிய " Physics " என்னப்பெறும் இவ் அறிவியற்பிரிவை - இங்கு "பௌதிக சாஸ்திரம் ", " பௌதீக விஞ்ஞானம் ", " பௌதீகம்", " பௌதிகம் " என்றவாறான கொடுவடிவங்களிலேயே கேட்கும்படியான ஆரியவயப்பட்டிருந்த கல்விச்சூழலே, ஒரு நூற்றாண்டுக்கும் முன்னரிருந்து நம்மவரைப் பின்னிக் கிடந்தது !*

*பூத நூல் - பொருள் நூல் (சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் : 1936 ), பௌதிகம் (சென்னை அரசுக் கலைச்சொல் தொகுப்பு : 1947), பௌதிகவியல் (1960), பௌதிக விஞ்ஞானம் ( இலங்கை : அரச கரும மொழித் திணைக்களம் : 1960), இயல்பியல் , இயற்பியல் ( தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் : 1972), பூதவியல் (தமிழியக்கப் பாசறை - காரைக்குடி : 1972) - என்றவாறு எழுவகைப்பட்ட வடிவங்களிலும் இவ் அறிவியற் பிரிவு, பெயர் வேந்துகொண்டு அலைந்து - ஒருவாறு "**இயற்பியல்** " என்னும் சொற்சுட்டு கொண்டு, இன்று அழுத்தம் பெற்று நிற்கின்றது !. . . .*

*இதன் தகுதிநிலை வரையறுப்புக்கும் முன்னீடாக - இத் துறை பற்றிய பெயரீட்டுக்கு அடிக்களனாக விளங்கும் நம் மரபு வழிப்பட்ட நோக்கில், சில*

பகுதிகளை விளங்கிச்செல்லுவது தேவையான தெண்மைக்குத் (= தெளிவுக்குத்) தென்பூட்டமாகி நிற்கும்!...

பூ = விரிவடை ; மலர்வுறு. ( "பூ"என்னுமிச் சொல்லாக்கத்திற்கும் முன்னீடாக, வேர்விளர்ச்சி நிலையுண்மைகள் உள ! இங்கு, அவை விரிவஞ்சி விடப்பெற்றுள!) பூத்தல் = விரிவடைதல், மலர்தல், தோன்றுதல், அகற்சியுறுதல் ( அகலிதாதல்)

அகலிதாயிருத்தல் - (அகற்சியுற்றிருத்தல் - பரந்துபட்டிருத்தல் ) என்னும் கருத்தடிப்படையிலேயே, இவ்வுலகம் தமிழில் - " பார் " என்னுமொரு சொல் கொண்டுங் குறிப்பிடப்பெற்றது ! பா = பரப்பு. " பாவடி யானை " பா + அர் > பாஅர் > பார் = பரந்த நிலம். பார் + அகம் > பாரகம் = உலகம் . [ " உலகம் " எனுஞ் செந்தமிழ்ச் சொல்லை - இங்கு வந்தேறி, " லோக் " என்றவாறு கொச்சையுறப் பலுக்கிய ஆரியப்பார்ப்பனர் - தமிழில் ( ஒருபொருள் பல சொற்களுளொன்றாக) வழங்கிய " பார் " என்னும் சொல்லுள், பரந்து விரிந்து கிடக்கும் பரப்புப்பொருளைப் பாராதேயே - பார்த்தல் (விழித்து நோக்குதல்) பொருளில் உள்ளதாகத் தவறாகக் கருதிப் பார்த்துவிட்டு - " Look " (ஆங்கிலம்) என்பதன் முன்னோடிச் சொல்லான கிரேக்க வழிப்பட்ட தம் முன்னோரின் மொழியிலிருந்து - தாம் சுமந்து கொணர்ந்த "Lok" என்னும் ஒரு சொல்லொடு தொடர்புடைய தாகவிருக்கும் என அதனைத் தவறாகக் கருதிக்கொண்டு, வலிந்து பற்றிவரலாயினர்! நந்தமிழவர் மீமிகு பண்டையில் உருவாக்கிய "உலகம் " என்னும் சொல்லும் , "லோக்" என்பதனின்று திரிபெதியதே என்றவாறு - தொடர்ந்து, நம்மிடமே கருத்தேற்றியும் வந்தனர்! பரிமேலழகியரென்னும் வல்லிய திருக்குறள் உரையாசிரியனான பழுத்த பார்ப்பான் - நம் முதற்குறளின் ஈற்றில் இறும் "உலகு" எனும் சொற்கு உரையவிழ்க்க வந்தவிடத்து, - "**காணப்பட்ட உலகத்தால்**" என்றவாறு வலிய விரித்த உரையுள்ளும் - ஆரியக்குழாம் கொண்டிருந்த கருதுகோளின் - விண்டு உத்த கருத்துப்பரப்பலின் தொடர்ப்பாட்டு இழையோட்டத்தைக் காணலாகும்! ...]

பரந்து விரிந்ததாகிய இப் பாரகத்தை, - **நனந்தலை, வியன்றலை, வியலகம், மலர்தலை** என்றவாறெல்லாம், பல வடிவங்களிற் பயின்றுள்ளமையுள் - நம் தமிழினத்தவரின் கருத்துப்போக்கு ஒருமை - ஐயந்திரிபறப் பதிவெதியுள்ளது. இதே அடிப்படையிலேயே - பரந்துபட்ட இவ்வுலகைப் " பூ " என்றும் வழங்கியுள்ளனர் ! " பூவுலகம் " என்னும் உலகவழக்குச் சொல்லும் பரப்படிப்படைக்

*கருவையே உருத்தி நிற்கின்றது!* *பூ = உலகம் (பிங்கலம் : 3875 )*

*ஆரியர் வருகைக்கு முன்னர், நாவலந்தேயம் முழுமையிலும் நந்தமிழரும் - நம் இனப்பிரிவினருமே பரந்து கிளைத்து வாழ்ந்திருந்தனர் ! அன்னன்னோரின் வட்டாரவழக்கு மொழிகளாகப் பயில்விலிருந்தன யாவும் - தமிழ்மொழியின் திசைவு - திரிபு ஆகிய வழக்குக்களாலான தொகையங்களே ! அக்கால், வடதிசைக்கண் வதிந்துவந்த நம் இனவழியினர் எவராலோ - ஒரு புதிய கூட்டுச்சொல் ஒன்றும் - இப் பூவுலகத்தைச் செவ்விதின் சுட்டுதற்கு உருவாக்கப்பட்டுப் பரந்தபயில்வில் பயன்பாடு கொண்டிருந்திருக்கின்றது! அவ் - அரிய இனிய கூட்டுச் சொல் -* ***"பூ-மண் "*** *என்பதாகும்.*

*"பூவுலகம்" என்னும் கருவுருவையும் போன்மையமைப்பையும் தாங்கிநிற்கும் அழகிய தெள்ளிய கூட்டுச்சொல் - இது !* [*படி > ப்ரதி; மெது > ம்ருது ; பவளம் > ப்ரவாள ; கமுக > க்ரமுக ; பரு > ப்ருஹ - என்றவாறெல்லாம் இடை மிகைப்புறுத்தி எடுத்திழுத்து வலித்து மிகப்பல சொற்களைத் தன்னதாக்கிக்கொண்ட கலப்புமொழியான சமற்கிருதம், - " மண்" என்னும் நம் செந்தமிழ் மண்ணுக்குரிய சொல்லையும் " ம்ருண " என்ற வடிவில் திரித்துக்கொண்டு கொழுத்தது! . . . ம்ருணாளினி ( மிருணாளினி) என்பது, மண்மகளைக் குறிக்கும் வடசொல்! வேறொரு முடியும் அதிலில்லை !* ]

*இப் "பூ- மண் " என்னும் அழகிய செப்ப வடிவத்தை , ஆரியர் தம் இருக்குவேதம் என்னும் மறையோத்துக்குள்* " Bhūman " *என்றவாறேயே நுழைத்து வைத்துள்ளனர்.* [Bhūman = the earth ; World. (Rig Veda )]. *கடை மறையாகிய அவர்களின் அதர்வண வேதத்துள், இப் "பூ மண்" எனும் வடிவை* " Bhuman " *என்றவாறு நெடுமுதற் குறுக்கி - ஆள்புலம் , தேசம் , மாவட்டம் என்னும் பொருட்பாடுகள்படப் படிவித்துள்ளனர். பாலி மொழியுள், இப் "பூ மண்" என்பதன் திரிபுவடிவாகிய* "Bhumma" *என்பது - மண்ணை மட்டுமே குறித்துப்பயில்வது கூர்ந்து கருதுதற்குரியது ! இப் " பூ-மண் " என்பது, - சமற்கிருதத்துள்* " Bhūman " *என்று நின்று பயில்வுற்ற பின்னர் - அருகிக் குறுகிக் கடைதிரிந்த நிலையிலாகி* " Bhūmi " *என்றவாறு வழக்குறத் தொடங்கியது! இவ்வகைத் திரிபுச் சாரல்வழி,* Bhūm , Bhum *என்றவாறான வடிவுகளும், வடபால் மொழிகள் சிலவற்றுள் படிந்தன!*

Pali : Bhūmi = earth ; ground.

: Bhummi = soil.
Prakrit : Bhumi ; Bhummi = ground
Nidoc : Bhuma = land
waigali : Bhūm
kati ; (katei) : Byūm
Dameli : Bhum = earth ; ground.
Ashkun : Bhum = earth ; ground.
Pashai : Bhūm
Kashmiri : Būm ; bum
Old Gujarati : Bhuim
Gawar Bati : bum
Kalasha : Bhum
Rumbar dialect of Kalasha : Bhum
Savi (Dardic) : Bhumē
Torwali (Dardic ) : Bhumē = field *(புலம்)*
Phalūra : bhum = ground.

*“ பூ ” - என்றவாறு பரந்துபட்ட இவ்வுலகைக் குறித்த தமிழ்ச்சொல், வடபால் தமிழினப் பிரிவாரின் ஆட்சிக்கிடையே பூ > பூ + இ > **பூயி** என்றவாறு இடப்பொருளீறான ஐகாரத்தின் அடுத்த திரிபான “ இ ” சேர்ந்த நிலையிலாக வழங்கியுள்ளது.*

[ *ஐ : ஓரிடப் பொருளீறு. (ஒ. நோ : கொல்லை ; படப்பை ; வேலை) இதன் மரபு நீட்சியே, ஊர்ப்பெயரைச் சுருக்கமாகக் கூறுகையில் - சுட்டுகையில் இக்காலும் பதிவெதிப் பயில்வுறுகின்றது. (காண்க : புதுச்சேரி > புதுவை.*

*புதுக்கோட்டை > புதுகை. கோவன்புத்தூர் > கோவை.*

*நெல்வேலி > நெல்லை. மாமல்லபுரம் > மல்லை*

*(கொல் + ல் + ஐ > கொல்லை = மரஞ்செடிகொடிகள் ஆகிய நிலைத்திணைகளை வெட்டியும் - தீயிட்டும் அழிக்கப்பெற்றுச் செப்பப்படுத்தப்பெற்றதாகிய புன்செ நிலம்.) கொல்லுதல் = அழித்தல்.*

*ஒ. நோ : 1. “ காடு கொன்று நாடாக்கி . . .”*

*2. “ இளைதாக முள்மரம் கொல்க.!”(குறள்).*

*மரத்தை அழித்து, அதனில் உரிய பொருளை உருவாக்கும் தச்சர், - மரங்கொல் தச்சர் (மரங்கொஃறச்சர் (மணி : 28 : 37) என்னப் பெற்ற பதிவும், - இவ்விடத்தில் கருத்திற்கொள்ள வேண்டியவொன்று! இக்*

கொல்லை என்பது, " கொல்லி " என்றவாறு வழக்கில் பயில்வுறும் நிலையில் - இவ் ஐகார - இகரத் திரிபின் போங்கைக் காணலாகும் ! ]

பூ > பூ + இ > (பூயி)

வடபால் மொழிகள் சிலவற்றில், - இதன் பதிவுப் படிவுகளாகுவன :

Sindhi : Bhū ; bhui
Lahnola : Bhoē
Awankari dialect of lahnda : Bhūi
West Pahari : Bhui
Panjabi : Bhū, bhō, bhui
Jaunsari dialect of West pahari : Bhūi
Kumauni : Bhi
Assamese : Bhūi
Bengali : Bhui
Marathi : Bhui
Bhojpuri : Bhui
Awadhi : Bhui
Lakhimpuri dialect of awadhi : Bhui
Hindi : Bhū ; bhui
Gujarati : Bhū
Maithili : Bhui
Konkani : bhui

பூ > பூ + து = பூது = விரிவடை
பூதுதல் = விரிவடைதல் ; பெரிதாதல்.
பூதித்தல் > பூரித்தல் = விரிவடைதல் ; பெரிதாதல்
இறும்பூது = பெருவியப்பு ; பெருவியப்பாலேற்படும் மகிழ்வு ; வியப்பு.

" இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும் " (மதுரைக் : 486)

பூது + அன் > பூதன் = பெரியோன் ; பெருமைக்குரியவன்.

பெருமைக்குரியவன் என்றவாறான பொருளில் வரும் - இப் "பூதன்" என்னும் பெயர், - கழகஇலக்கியக் காலத்தில், பெரு வழக்கினதாகப் பரவியிருந்தது! (காண்க : இளம்பூதனார்; கரும்பிள்ளைப் பூதனார் ; காவன்முல்லைப் பூதனார் ; காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்; குன்றம்பூதனார் ; கோடை பாடிய பெரும்பூதனார்; சேந்தம்பூதனார்; மருங்கூர்ப் பாகைச் சாத்தன்பூதனார் ; வெண்பூதன்; ஈழத்துப் பூதன் தேவனார் ; பூதங்கண்ணனார்) (மேலுங் காண்க : ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் ; பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.)

பூதன் + தந்தை > பூந்தை.
ஆதன் + தந்தை > ஆந்தை

[காண்க : " ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரம் துவரக் கெடுமே "

*(தொல் . எழுத் . உயிர் : 348)*]

*பூது = பெருகு ; விரிவடை ; வளர்*

> *(சமற்கிருதம்)* bhūta : become

*(பாலி)* bhūta : grown ; become

*பூது + அம் > பூதம் = விரிவடைவது ; விரிவடையும் தோற்றமுடையது ; விரிவுறுந் தோற்றத்துப் பெரும்பே.*

*" கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்*
*துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோல் "*

*( பெரும் : 235 )*

*(நச். உரை : துணங்கைக் கூத்தாடுகின்ற அழகினையுடைய பூதங்கள், வெள்ளிய துகிலையுடுத்து நின்றவைபோல் . . . . . )*

*பூதம் > (சமற்கிருதம் )* Bhūta = Spirit ; demon

*(பாலி)* bhūta = demon

*பூதம்* > (Greek ) Puthon : sooth saying demon.

[ Puthon > Python (Greek ) a huge serpent or dragon killed by Apollo.]

> (English) Pythomers = Witch.

*விரிவுறும் இயற்கைக் கூறுகளாகிய நிலம் , நீர் , தீ , வளி , வெளி என்னும் ஐந்தும் - " பூதம் " என்னும் பெயரால், பண்டையில் தமிழ மாந்தரால் சுட்டப் பெற்றன!*

*1. " காலம் உலகம் உயிரே யுடம்பே*
*பால்வரை தெவம் வினையே பூதம் " (தொல். கிளவி : 58)*

*தெவச்சிலையார் உரை : (பூதம் =) பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும்பூதம்.*

*2. " மண்டிணிந்த நிலனும் - நிலனேந்திய விசும்பும் -*
*விசும்புதைவரு வளியும் - வளித் தலைஇய தீயும் -*
*தீமுரணிய நீருமென்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை போல "*

*(புறம் : 2 : 1 - 6)*

*3. " வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும். " (குறள் : 271)*

*4. " வளியென வரூஉம் பூதக் கிளவியும் "*

*(தொல் . எழுத். உயிர் : 242)*

*பூதம்* > (Skt) Bhuta > bhautika.

bhautika Sastra : Physics

[ *ஒ.நோ : புத்ர* > Pautra. *புத்தம்* > bauddha

*புராணிக* > Paurānika *புருஷ* > Paurusha

*குமார* > Kaumāra. ]

" பூ "- என்னும் நம் தமிழ் வேரொலி, - கிரேக்க மொழியில் " phu " என்றவாறே படிந்து, பரத்தல் - விரிவடைதல் போலும் கருத்தடிப்படைகளையுடைய பலசொற்களை, அங்குக் கிளைக்கும் நிலைகளுக்கான வாகாலிட்டுள்ளது !

[ (GK) phu = widespread.

(GK) pū > phu = blow ; inflate

(GK) phusa > (Latin) pusula > pussula > pustula > (Old French) > pustule >

(Eng.) pustule = pimple. (கொப்புளம் ; பரு )

(காண்க : பக் : 726. Ox. Dic . of English Etymology.

C. T. Onions) ]

" பூ " என்னும் தமிழ்வேர் வழியிற் கிரேக்கமொழியிற் படிந்த " Phu " என்னும் அடிச்சொல்லின் கிளைப்பாகவே, Phusis (= nature) ( = இயல்பாகத் தோன்றி விரிவடைவதாகிய இயற்கை ) என்றவாறான ஆக்கச் சொல்லும், ஆங்கு எழுந்தது! " Phusis " என்னும் சொல்வழியில் " Phusikos " என்னும் பிறிதொரு வடிவந் தோன்றி, - அதுவே "Phusike" என்னுமாறு திரிபுற்று - இலத்தீனத்தில் Physica, Physicae எனும் வடிவங்களிலும், பிரஞ்சில் Physique என்னும் வடிவத்திலும் படிந்து பரந்து பயில்வுற வழிகோலியது ! இவையனைத்திலும் இயற்கையறிவியல் (natural science) என்னும் செப்பப்பொருளே கொள்ளப்பெற்றது !

" Physique " என்னும் பிரஞ்சு வழக்கு , மேலும் திரிந்து "fisique" என்னும் வடிவெதியது . இயற்கைப் பொருளினின்று கிடைக்கும் மருந்து (Medicine) என்ற பொருளில், இவ்வடிவு பயில்வுற்றது. [ (GK) Phusikos (phusis > phusi (Kos - suffix) = nature, essence of a thing.] இத் தகுநிலைகளிலான தொடர்புறவுகளின் தாக்குரவாலேயே, இன்று " Physic " என வழங்கும் ஆங்கிலச்சொல், -

1. இயற்கை அறிவியல் (natural science)
2. மருந்து (medicine)
3. மருந்து உருவாக்கம் (Medicinal preparation)
4. உடலை நலப்படுத்துங் கலை (healing art) என்றவாறான

நாற்பொருட்பாடுகளில் பயன்படுத்தப்பெறுகின்றது என்பதையும், நாம் இவ்விடத்திற் கருதிப்பார்த்தல் வேண்டும்.

அறிவியற்கருத்துக்களின் விரிவும் விளக்கமும் - தெரிவும் துலக்கமும் பெருகப் பெருகத் - தொகுபெயரில் அமைந்திருந்த தொடக்கப் பெயர் - வரையறையுடையதாகிய ஒரேயொரு செப்பப் பொருட்பாட்டில் மட்டுமே

வழங்கவும் - அதனின் நுண்பகுதிகளுக் குரிய கூறுகள் பல்வேறு துறைப்பிரிவுகளாகத் தனித்தனியே வளர்ந்துவரவுமான முறைநிலையொழுங்கு, இக் காலத்தில் மிகத்தெளிவாகக் கடைப்பிடிக்கப்பெற்று வருகின்றது ! இவ் வகையில், "இயற்கை அறிவியல்" என்னும் பொதுப்பொருளில் வழங்கி நின்ற "Physics"(= natural science) என்பது, - "பொருள் மற்றும் ஆற்றல் இவற்றிற்கிடையிலான ஊடெழுவினைகள் பற்றியதும் - பொருள்களோடு தொடர்புடையதுமான ஆவியற்பிரிவு" - என்னும் தெளிந்த வரையறுப்புடைய பொருளில், இன்று நின்று நிலைகொண்டுள்ளது !

"nature" என்னும் சொல்லுக்கு,- இயற்கை, இயல்பு (இயற்கைப் பண்பாகிய நடத்தை ) என்றவாறான இருவகை அடிப்படைப் பொருள்கள் பரந்த பயில்வுநிலையில் உள்ளன! இதனுள் "இயற்கை" என்னும் பொருளடிப்படை மட்டுமே " Physics " என்பதன் கருவகத்துள் உள்ளது என அறியாது மயங்கிய இயல்பினரா - nature என்னும் சொல்லுக்கு அமைந்திருக்கும் " இயல்பு " என்னும் பிறிதொரு பொருளையுட்கொண்ட சிலர், ( ' இயல்பு ' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதினாறு வகைப்பட்ட பொருட்பாடுகள் தமிழுள் உள்ளனவாதலின் - அவற்றின்வழியே பின்னர் நேரலாகும் மயக்கங்களையும் குழப்படிகளையும் எண்ணிப்பாராதோரா - ) - மிகப் பிழையான பொருட்பாடு அமையுமாறு " இயல்பியல் " (= Physics) என்றவாறு துறைப்பெயர்நிலையில் முட்டுக்கட்டைத்தனத்தோடு சுட்டவும் பயிலவும் தொடங்கினர் !

இது, இயல்பு பற்றிய இயலன்று என்று இடைநின்று சிந்தித்த சிலர் , " இயற்பு " என்னும் சொல்வடிவை மீளவுஞ் சமைத்துக் கொண்டு, ( "இயற்பு" என்னும் சொல்லுக்கு "இயக்கம் "என்னும் பொருட்பாடு மட்டுமே, முன்னர் வழக்கிலிருந்தது . (காண்க : இயற்பின்றி எல்லாம் இருள் மூடமாமே " திருமந்திரம் : 2210 ) இயலை உடனிணைத்து " இயற்பியல் " என்றவாறு வழங்கிவரத் தலைப்பட்டனர்! (இவ் வகையிலான முயற்சியும் பயிற்சியும் **பன்மொழிப்புலவர் - அப்பாத்துரையாரை** அடியொற்றியதாகும்! . . . (காண்க : செ. ப. க. ஆங்கிலம்- தமிழ் அகராதி. பக் : 733. ( மேலுங் காண்க : பக் : 216 . ஆட்சி. அக .)

" இயல்பியல் " என்பதுவும் - " இயற்பியல் " என்பதுவும் - கிரேக்கச்சொல்லுக்குரிய பொருட்பாடுகளை அடியொற்றி அமைக்கப்பெற்ற குழப்பவடிவங்கள் ! . . . . பௌதீகமும் - பௌதீக (இயலும்) - பௌதீக - (விஞ்ஞானமும்), - இயற்கை வியல்வுப் பொருள்குறித்துச் செந்தமிழில் ஆக்கம் பெற்றிருந்ததும், நீணெடுங் காலமாக மிகப்பரவலாக இம் மண்ணில் தொடர்ந்து வழங்கப் பெற்று வருவதுமான (பூது +அம்) > **பூதம்** என்னும் சொல் கண்டு - கொண்டு கோணுறுத்திய நிலையிலாகப் புரட்டியெடுத்துப் பதித்துக்கொண்ட சமற்கிருத வழியிலாகிய சுட்டுக்கள் ! . . .

*“ பூதநூல் - பொருள்நூல் ” என்றவாறு, சென்னை மாநிலத் தமிழ்க் கழகத்தார் (சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ) (1936)-குறித்ததுவும் - அதனை உற்று உள்நோக்கிப் - பற்றி அடியொற்றிய நிலையிலாகப் “பூதவியல்” என்றவாறு காரைக்குடித் தமிழியக்கப் பாசறையினர் (1972) மீண்டும் புதுக்கி வழங்கிப் பதித்ததுவும் - தமிழர் அறிவியல் மரபையும் உணர்வையும் மதித்து உணர்ந்து வழிப்பட்டு இயங்கும் மானத்தகைமையுடையன !*

*பண்டைப் பேதையருட் சிலர், அறியாமை சான்ற மனவச்சக் கருத்தேற்றக் கோளாற்றால்,- படிப்படியே விரிவடைந்து பருப்ப முறுவதாகக் கருதிக்கொண்டு சுட்டிய - பெயர்சூட்டலின் வழியே பெருக நின்றாடிய “பூதம் ” என்னும் பேவகையுட் பேருருவாகிய ஓர் அல்லுருவை, இவ்விடத்தில் மீண்டும் தேவையில்லாமலேயே கருதி அச்சமும் மயக்கமும் கொள்ளுதற்கு மேலும் இடந்தரா நிலையிலாக [( பூதம் + இயல் >) பூதவியல் என்னும் மயக்கந் தருஞ் சொல்லமைவைத்தவிர்த்துவிட்டு-]- விரிவடைதற் கருத்தடிப்படையையுடைய அடிச்சொல்லான “ பூது ” என்னும் வடிவை மட்டுங்கொண்டு “ இயல் ” என்பதனை அதனொடு இயல்பாகப் புணர்த்தி - ( வேதியல் என்னும் வடிவுக்கு நேரிய வகையில் . . . . . ) “பூதியல் ” ( = Physics) என்றவாறு ஏற்புற அமைத்துக்கொண்டு வழங்கத்தலைப்படுதலே - சரியாகும் ! . . .*

***(திசம்பர் - 1998)***